வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 10.07.2021 சனிக்கிழமை | இதழ் : 219 | பக்கங்கள் : 16



# அரசியல் பரபரப்புக்கு மத்தியில் மஹிந்த-ரணில் திடீர் சந்திப்பு!

கொழும்பு, ஜூலை 10

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க இடையே திடீர் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி தேசிய ரீதியில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாக அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் மீள் அரசியல் வருகையை அடுத்து கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜ

15

# ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து அரசை கவிழ்க்கவே முடியாது

## மக்கள் மனதில் 'தாமரை மொட்டு' இருக்கின்றது என்கிறார் பஸில்

கொழும்பு, ஜூலை 10

"ஆர்ப்பாட்டங்கள் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசைக் கவிழ்க்கவே முடியாது என்பதை எதிரணியினரிடம் சொல்லிவைக்க விரும்புகின்றேன். பிரயோசனமற்ற இந்த ஆர்ப்பாட்டங்களை கைவிட்டுவிட்டு நாட்டினதும் மக்களினதும் நலன் சார்ந்த அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் எதிரணியினரிடம் கேட்டுக்கொள்கின்றேன்."- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

15

## ஆர்ப்பாட்டங்கள் நடந்தால் அரசின் கைதுகள் தொடரும்

### சபையில் எச்சரித்தார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூலை 10

எதிர்காலத்திலும் எவரேனும் போராட்டங்களை மேற்கொண்டாலும், பொலிஸார் அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என அமைச்சர்

15

## 1,537 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,537 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 71 ஆயிரத்து

15



## நவாலி படுகொலை நாளில் வீடுகளில் சுடரேற்றி அஞ்சலி

மானிப்பாய், ஜூலை 10

நவாலி படுகொலையின் 26 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று மாலை 6.30 மணிக்கு வீடுகள், பொது அமைப்புக்களிலும் மக்கள் தீபங்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

15

## புதிய தளர்வுகள் நேற்று வெளியீடு

கொழும்பு, ஜூலை 10

திருத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். அதில்தற்போது நடைமுறையில் உள்ள பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

குறைந்த எண்ணிக்கையிலானோர் பங்கேற்புடன் திருமண நிகழ்வுகளை நடத்தவும், சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் வழிபாட்டுத் தலங்களில் வழிபாடுகளை நடத்தவும் அனுமதிக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி கூறினார்.



## சுதந்திர சதுக்கத்தில் எம்.பிக்கள் சுதந்திரம் கோரி ஆர்ப்பாட்டம்!

### அரசின் ஒடுக்குமுறைகளுக்கு கண்டனம்

கொழும்பு, ஜூலை 10

அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை வலியுறுத்தியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுப் போராட்டத்தை முன்

15




# ஒரு நாடு; ஒரு சட்டம் என்று நீங்கள் சொன்னது யாருக்கு?

### ஆர்ப்பாட்டத்தில் மனோ கணேசன் கேள்வி

கொழும்பு, ஜூலை 10

"தங்கள் துன்பம், துயரம் காரணமாக மக்கள் தெருக்களுக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்களை இந்த அரசின் பொலிஸ் படை கைது செய்து, சுய தனிமைக்கு அனுப்புகிறது. ஆனால், இந்நாட்டுக்கு அமெரிக்காவில் இருந்து, அலாவுதீனின் அற்புத விளக்குடன் வந்த பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து, பல இடங்களில் பலர் கூடி நின்று பட்டாசு வெடித்தார்கள். அவர்கள் மீது ஏன் இந்த கொரோனா சட்டம் பாயவில்லை?" என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளார்.

15

# இப்படியும் நடக்கிறது...!

அப்போது இந்த ஊர்க்குருவிக்கு வயது ஏழு அல்லது எட்டு என்று நினைக்கிறேன்.

முற்றத்தில் நின்று விளையாடிக் கொண்டிருக்கும் போது, அப்பு (அம்மாவின் அப்பாவை நாங்கள் அந்தக் காலத்தில் அப்பு என்றுதான் சொல்வது வழமை) சொன்னார், முன்வீட்டு சரசக்காவிடம் போய் அவரின் கோடாலியை இரவல் வாங்கிக்கொண்டு வருமாறு.

முன்வீட்டு அன்ரியின் பெயர் சரசு. அவரை சிறியவர் பெரியவர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் சரசக்கா என்றுதான் அழைப்பார்கள்.

நான் கையில் வைத்திருந்த சைக்கிள் சில்லை உருட்டியவாறே ஓடிச்சென்று, சரசக்கா வீட்டு வேலியில் நின்றவாறே, “சரச்சகா, அப்பு உங்கட கோடாலியை வாங்கிக்கொண்டு வரட்டாம்”, என்றேன்.

வழக்கமாக எதைக்கேட்டாலும் தரும் சரசக்கா, அன்று என்ன கொதியில் இருந்தாரோ தெரியவில்லை. “கோடாலி இல்லை எண்டு சொல்லடா”, என்றார்.

நான் சைக்கிள் சில்லை உருட்டியவாறு ஓடிவந்து, “அப்பு, சரசக்கா கோடாலி தர ஏலாதாம்”, என்றேன்.

அப்புவுக்கு பொல்லாத கோபம். “அட இந்த சரசைப் பார்த்தியளே, அவளுக்கு எத்தினை உதவியைச் செய்யுறன். இந்தக் கோடாலியைத் தரமாட்டம் எண்டுட்டாள்”, என்று திட்டியவாறே அப்பு சொன்னார்,

“தம்பி, நம்மட கோடிக்க இருக்கிற கோடாலியை எடுத்துக்கொண்டுவா”, என்றார்.

வீட்டுப் பின்புறத்தை கோடி என்று கிராமங்களில் அழைப்பது வழமை. அதாவது தனது கோடாலியை பத்திரமாக வீட்டு கோடியில் வைத்துவிட்டு எங்கட அப்பு, முன்வீட்டு சரசக்காவின் கோடாலியால்தான் விறகு வெட்டுறவர்.!

நேற்றைய தினம் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் ஒரு மருந்தக உரிமையாளர். கொழும்பு வெள்ளவத்தையில் பிரபலமான ஒரு மருந்தகத்தின் உரிமையாளர்.

அவரைத் தற்செயலாக சந்தித்ததும் நின்று சில வார்த்தைகள் பேசவேண்டிவந்தது.

“எப்படி பிசினஸ் போகிறது?”, என்றேன். இந்த முடக்க காலத்திலும் திறந்திருந்து பிசினஸ் செய்த முக்கியமான வர்த்தகம் பார்மசியள்தானே.

அதனால் அவரைப் பொறுத்தவரை வர்த்தகம் தடைப்பட்டிருக்காது என்பதால் அவ்வாறு கேட்டேன்.

“ஐயோ அதை ஏனடாப்பா கேட்கிறாய். கடையை சும்மா திறந்து வைத்திருந்ததால் மேலதிக செலவுதான். நாங்களும் பூட்டிப்போட்டு வீட்டில இருந்திருந்தால், லைற் பில் மற்ற செலவுகளாவது மிஞ்சியிருக்கும்.”, என்றார் சலித்துக்கொண்டு.

எனக்கு மேலதிகமாக அறியவேண்டும் என்ற ஆவல். அவரை விடவில்லை.

“முந்தி எண்டால் சனம் தொட்டதுக்கும் பார்மசிக்கு வரும். தடிமல், காய்ச்சல் எண்டால் ஓடிஓடி வரும். இப்ப எல்லாம் சனம் இப்பிடிச் சின்னசின்ன வருத்தங்களுக்கெல்லாம் வீட்டிலையே மல்லித் தண்ணியையோ, வேது பிடிக்கிறதோ எண்டு வீட்டிலயே மருந்தை செய்துபோடுதுகள். ஏன் கடும் காய்ச்சல் எண்டாலும் ஆஸ்பத்திரிக்கு போனால் பி.சி. ஆர். எடுத்து கொரோனா இருந்தாலும் எண்டு போட்டு வீட்டு வைத்தியத்தையே செய்துகொண்டு இருந்திருதுகள்....”, அவர் சலித்துக்கொண்டார்.

கொழும்பிலிருந்து ஊருக்கு வந்துகொண்டிருந்த போது கூடவே வந்த டான் குழும கணக்காளர் செல்வச்சந்திரனுடன் இந்த பார்மசிக்காரின் கதையை இரைமீட்டபோது அவர் தொடர்ந்தார்.

“ஓமோம்... இப்ப எல்லாம் நம்மட சனங்கள் மறந்து போன பல உணவு வகைகளை திரும்பவும் செய்யத் தொடங்கிவிட்டுதுகள்... அந்தக் காலத்திலை எப்பவாவது மட்டும் வைக்கிற பத்தியக் கறியை இப்ப தினமும் செய்து சாப்பிடத் தொடங்கியிருக்கினம்...

“கொரோனா தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைக்கு கொண்டுபோனபிறகு நம்மட பழைய சாப்பாட்டு வகைகளைத்தான் மருந்தாக கொடுத்திருக்கினம். அதால இப்ப எல்லாம் சனம் நம்மட பழைய சாப்பாடுகளைத்தான் தேடி சாப்பிடுகினம்...”, என்றார் அவர்.

அப்புவின் கோடாலிக் கதைதான் எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வந்தது.

அப்பு தன்ர கோடாலியை வைத்துவிட்டு சரசக்காவின் கோடாலியால் விறகு வெட்டின மாதிரி, நாம் நமது பழைய சாப்பாடுகளிலேயே பல்வேறு வகையான மருந்துகளை வைத்துக்கொண்டு, அவற்றை சாப்பிடாமல் இரசாயனக் கலவைகளை சாப்பிட்டுக் கொண்டிருந்திருக்கிறோம்.

**- ஊர்க்குருவி**

# இறுதி அத்தியாயத்தை நெருங்குகிறது அரசு

## சம்பிக்க எம்.பி. கருத்து

கொழும்பு, ஜூலை 10

ஜனநாயக கொள்கைகளுக்கு முரணாகவே அரசாங்கம் செயல்படுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிராகப் போராட வேண்டும். அரசாங்கம் இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது - என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், “மக்களின் பேச்சு சுதந்திரம் பலவந்தமான முறையில் அடக்கப்படுகிறது. இதற்கு கோவிட் தனிமைப்படுத்தல் சட்டம் பயன்படுத்தப்படுகிறது . கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (நேற்று முன்தினம்) சிவில் அமைப்பினர் பாராளுமன்ற சுற்று வட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்தப்போராட்டத்தை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்கினார்கள். ஆனால், நிதிய மைச்சராக பஷில் ராஜபக்ஷ பதவியேற்றதை வீதியில் பட்டாசு வெடித்து கொண்டாடிய தரப்பினர்களை பொலிஸார் கவனத்தில் கொள்ளாமல் இருந்தது ஆச்சரியத்திற்குரியது.

ஜனநாயக கொள்கைக்கு முரணாக அரசாங்கம் செயல்படுகிறது. பேச்சு சுதந்திரம் சர்வாதிகரமான முறையில் முடக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் செயற்பட்ட அரசியல் தலைவர்கள் இறுதியில் மக்களால் புறக்கணிக்கப்பட்டதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். அரசாங்கம் இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது. அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் பாடம் புகட்டுவார்கள் - என்றார்.

(ஐ)

# மின்சாரம் தாக்கி இளம்தாய் பலி!

முல்லைத்தீவு, ஜூலை 10

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு - சுதந்திரபுரம் - கொலனி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் 29 வயதான இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்தார்.

மின்சார கசிவு காரணமாக இந்த அனர்த்தம் சம்பவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அனுமதியற்ற கடைகள் அகற்றப்பட்டன

வவுனியா, ஜூலை 10

வவுனியா தாண்டிக்குளம் ஏ-9 வீதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபார நிலையங்கள் நேற்று அகற்றப்பட்டன.

அந்தப் பகுதியில் ஏ-9 வீதி மற்றும் ரயில் பாதைக்கு அருகாமையில் உள்ள பகுதிகளில் சிலரால் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வியாபார செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் சுற்றுவேலிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் நேற்று காலை அந்த பகுதிக் குச் சென்ற வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபாரநிலையங்களை அகற்றியதுடன், சுற்றுவேலிகளையும் அகற்றிச் சென்றனர்.

## கல்வி TV CHANNEL-1

**10.07.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி TV CHANNEL - 2

**10.07.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
10.07.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# அரசாங்கத்தின் முகம் மாறுமா?

பொதுஜன பெரமுன பஸில் மாயைக்குள் சிக்குண்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்த பல பொறுப்புக்கள் பஸில் ராஜபக்ஷ விடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் மூவர் அடங்கிய குழுபோல் ராஜபக்ஷக்கள் காட்சியளிக்கின்றனர். பஸில் ராஜபக்ஷ தொடர்பில் பலவாறான நம்பிக்கைகள் ஊட்டப்படுகின்றன. அரசாங்க தரப்பினரும் பஸிலின் வருகையால் உற்சாகமடைந்திருக்கின்றனர். ஆனால், பங்காளி கட்சிகளோ கவலையடைந்திருக்கின்றன. ஒன்றில், முரண்பாடுகள் தீவிரமடையலாம் அல்லது ராஜபக்ஷக்களின் வியூகத்திற் குள் சிறு கட்சிகள் அனைத்தும் கரைந்து போகலாம்.

பஸில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசம் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பது தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் கட்சிகள் மத்தியில் காணப்படுகின்றன. ஆனால், ஒரு தனிநபரால் அதிக மாற்றங் களை ஏற்படுத்திவிட முடியாது. ஆனால், பஸில் ராஜபக்ஷவிற்கு ஒப்பீட்ட டிப்படையில் ஒரு தாராளவாத முகமும் உண்டு. மஹிந்த மற்றும் கோட்டா பயவுடன் ஒப்பிட்டால் சர்வதேச அரங்குகளில் அதிகம் விமர்சனங்களை எதிர்கொள்ளாத ஒருவர். இந்த முகத்தை ஒரு முதலீடாகக் கொண்டு சில முயற்சிகளை பஸில் செய்யக்கூடும் ஆனாலும் அது இலகுவானதல்ல.

ஆனால், பஸில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் முகத்தை மாற்றுவதற்கு முயற்சிக்கலாம். இதன் மூலம் சில நெருக்கடிகளை சமாளிக்க முடியு மென்று அவர் கருத வாய்ப்புண்டு. அதாவது, கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒரு பௌத்த - சிங்கள அரசாங்கம் என்னும் முகத்தையே காண்பித்துக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை ஒரு சிங்கள - பௌத்த தலைவனாகவே பிரகடனம் செய்திருக்கின்றார். இந்த அரசாங்கம் எண்ணிக்கையில் சிறுபான்மை யான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஓர் அரசாங்கம் என்னும் தோற்றம் வெளிப்படையாகவே தெரிகின்றது.

இந்த நிலையில், பஸில் ராஜபக்ஷ இந்த முகத்தை மாற்றுவதற்கு முயற்சிக்கலாம். முக்கியமாக முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய முஸ்லிம் தலைமைகளுடன் பஸில் ஓர் உரையாடலை ஆரம்பிக்கக்கூடும். முஸ்லிம்களை அரவணைப்பதன் ஊடாக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பஸில், முஸ்லிம் கட்சிகளுடன் மிகவும் நெருக்கமான தொடர் பைக் கொண்டிருந்தார். அந்தத் தொடர்பை மீளவும் அவர் பயன்படுத்தக்கூடும்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஓர் உரையாடலை ஆரம்பிக்கக்கூடும். பஸில் நாடு திரும்பியதும் கூட்டமைப்புடன் பேசுவார் என்னும் செய்தி ஒன்றும் ஏற்கனவே வெளிவந்திருந்தது. இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கத்தின் முகத்தை மாற்றுவதற்கான முயற்சிகளை பஸில் ராஜபக்ஷ மேற்கொள்வதற்கான வாய்புக்கள் உண்டு. இதன் மூலம், தனிச்சிங்கள மற்றும் சிறுபான்மைகளுக்கு எதிரான அரசாங்கம் போன்ற விமர்சனங்களை ஓரளவு எதிர்கொள்வதற்கு உதவலாம்.

இதில் முஸ்லிம்கள் பஸிலின் புன்னகையுடன்கூடிய இராஜதந்திரத்திற் குள் கரைந்து போவதற்கான வாய்ப்பு உள்ளது. ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரையில் முதலில் தாங்கள் மூச்சுவிடுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பிலேயே சிந்திப்பர். வாய்ப்பு அவர்களின் கதவை தட்டுமாயின் நிச்சயம் அவர்கள் அதனைப் பற்றிக்கொள்வர். மனித உரிமைகள், ஜனநாயகம் தொடர்பில் அவர்கள் அலட்டிக்கொள்ளப் போவதில்லை. கடந்த காலங்களிலும் மனித உரிமைகள் சார்ந்த கரிசனைகள் மீதான ஈடுபாட்டை முஸ்லிம்கள் காண்பித்தவர்கள் அல்ல. குறிப்பாக இறுதி யுத்தத்தின் போது, தமிழ் மக்களின் மனித உரிமைகள் சார்ந்து அவர்கள் ஒரு துளியளவுகூட கரிசனையை காண்பிக்கவில்லை. மஹிந்த ராஜ பக்ஷவை நியாயப் படுத்திக் கொள்வதிலேயே மும்முரமாக இருந்தனர்.

ஆனால், அவர்கள் ஓரங்கட்டப்பட்ட பின்னர்தான், மனித உரிமைகள் சார்ந்தும் ஜனநாயகம் சார்ந்தும் சிந்திக்க முயற்சித்தனர். ஆனாலும் மீண்டும் ராஜபக்ஷக்களுடன் இணைந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்குமாயின் அவர்கள் அதனை நிச்சயம் பயன்படுத்திக் கொள்வர். பஸிலின் நகர்வுகளில் முஸ்லிம்களை கையாளுவது பிரதான தந்திரோ பாயமாக இருக்க வாய்ப்புண்டு. ஆனால், தமிழர் விடயத்தில் ஒரு கட்டத் திற்கு மேல் தந்திரோபாயங்களை வகுக்க முடியாது. ஏனெனில், தமிழர் விவகாரம் சர்வதேச அரங்கில் பேசு பொருளாக இருக்கின்ற விடயம்.

# என்றுமில்லாதவாறு நாட்டில் நிலவும் ஒரு பலம்பொருந்திய ‘குடும்ப ஆட்சி’

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் உயர் கல்வித்துறை, ஊடகத்துறை மற்றும் மருத்துவத்துறை என்பவை ஆட்சியாளர்களின் அச்சுறுத்த லுக்கு உள்ளாகியுள்ளதோடு நாட்டில் ஓர் இராணுவ மயமான ஆட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் பலமடைந்து வருகின்றதோ என எண்ணத் தோன்றியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத் தலைவராக பதவியேற்ற காலம் முதல் முழுஉலகையுமே உலுப்பி வருகின்ற கோவிட்-19 அச்சுறுத்தல் இலங்கையில் அனைத்து துறைகளையும் முடக்கி விடுமள வுக்கு இருந்து வருவதோடு அரசுக்கும் சவால் விடுவதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் அரசுக்கு எதிரான போராட் டங்கள் பரவலாக இடம்பெற ஆரம்பித்துள் ளன. நேற்று முன்தினம் கொழும்பில் கொத்தலாவல பாதுகாப்புத்துறை பல்கலைக் கழகம் குறித்த அரசின் உத்தேச சட்ட மூலத் துக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றிருந்தது.

**தனிமைப்படுத்தல் நடவடிக்கை**

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உட்பட 31 பேர் கோவிட்-19 தடுப்பு நடைமுறைகளை மீறியமைக்காகக் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப் பட்டோர் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட விருப்பதாகவும் இது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியதை நோக்கும்போது தனிமைப்படுத்தல் நிலையங்கள் என்பவை அரசாங்கத்துக்கு எதிரானவர்களை பழிவாங்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்டவையோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஓரிரு தினங்களுக்கு முன்னரே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸ நாயக்க, நாட்டின் சிம்மாசனத்திலிருப்பவர் கடந்த காலங்களில் பலதரப்பட்ட அராஜக நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார் என்று தெரிவித்திருந்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதி பதியானதும் முக்கிய பொறுப்புகளில் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தளபதிகளையே நிமித்திருந்தார்.

**கோவிட்-19 செயலணி**

இதுதவிர, இலங்கையில் கோவிட்-19 வியாதியின் அச்சுறுத்தல் ஏற்பட ஆரம்பித்த துமே அதனைத் தடுப்பது குறித்த அனைத்து நடவடிக்கைகளையும் கையாள்வதற்கு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான விசேட செயலணி ஒன்றையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜப க்ஷ நியமித்திருந்தார். ஆனால், தற்போது மருத்துவ துறையினருக்கும் இராணுவத்தி னரை உள்ளடக்கிய விசேட செயலணிக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் அதிகரித்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

தடுப்பூசி விநியோகம், மற்றும் நாட்டில் கட்டுப்பாடுகளை கோவிட்-19 வியாதி தொடர்பாக அமுலாக்குதல் என்பவை குறித்தே இராணுவ விசேட செயலணியின ருக்கும், மருத்துவ துறையினருக்குமிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றன.

இத்தகைய முரண்பாடான நிலையை நோக்கும்போது இராணுவத்தினரின் தலை யீடு அனைத்துத் துறைகளிலும் இருப்ப தையே அறிந்துகொள்ள முடிகின்றது. இத்த கைய பின்னணியில் ஊடகத்துறை மீதும் அரசதரப்பு தனது விரலை நுழைக்கும் நட வடிக்கைகளில் இறங்கியுள்ளதையும் அவதா னிக்க முடிகின்றது.

இலங்கையின் ஊடகத்துறை மிகவும் பாதிக்கப்பட்டதாகவும் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டதாகவும் இருப்தோடு ஊடக வியலாளர்கள் பலர் கைது செய்யப்பட்ட, கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

எனவே, மீளவும் ஊடகத்துறை மீது கைவைக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க அரச தரப்பு உத்தேசித்துள்ளதை சுட்டிக் காட்டியே எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேம தாஸ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டிருந்தது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரம சிங்கவும் கோவிட் -19 தனிமைப்படுத்தல் நட வடிக்கைகள் அரசியல் பழிவாங்கலாகவே மேற்கொள்ளப்படுகின்றதென தெரிவித்துள் ளார். ரணில் விக்கிரமசிங்க கூறுவதை நோக்கும் போது கோவிட் -19 வியாதியை மையப்படுத்தி தனிமைப்படுத்தல் நிலையங்களை அடக்கு முறைகளுக்காக அரசு பயன்படுத்துகின்றதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

**பலம் மிக்க குடும்ப ஆட்சி**

இதுதவிர ஒரு குடும்பத்தின் தன்னாதிக் கத்தை அரசியலில் பலப்படுத்தும் விதத்தில் பலதரப்பட்ட நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன என்ற அபிப்பிராயமே நாட்டில் பொதுவாக நிலவுகின்றது.

இலங்கையில் குடும்ப ஆட்சிகள் என்பவை புதிதானவையல்ல. ஆனால், கடந்த காலங்க ளில் என்றுமே காணப்படாததைப்போல ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் போன்ற முக்கிய பதவிகளில் இன்றைய அரசாங்கத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இருப் பதை நோக்க முடிகின்றது.

இதன்காரணமாகவே நாட்டின் தலைவிதி யையே தீர்மானிக்கும் விதத்தில் காணப்படு கின்ற ஒரு குடும்ப ஆட்சி குறித்து அரசாங் கத்திலுள்ள பங்காளிக் கட்சிகளும் அதிருப்தி யடைந்துள்ளமையையும் அண்மைக்காலங் களில் பங்காளிக் கட்சிகளில் இருப்போர் அரசுக்கு எதிராக வெளிப்படுத்தி வரும் கடும் விமர்சனங்கள் மூலம் அறிய முடிகின்றது.

எனவே, எதிர்வரும் காலங்களில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியல் விரிவடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருதமுடியும். •

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
நிதானத்துடன் செயல்படுவீர்கள். தடுமாற்றம் மறையும். ஆடம்பர முயற்சிகளைத் தள்ளி வைப்பது நல்லது. நிம்மதி நிலைக்கும். புதிய முயற்சி வெற்றி பெறும்.

**இடபம்**
புதிய முயற்சி வெற்றி தரும். உற்சாகம் கூடும். மனக்குழப்பம் ஏற்பட்டு விலகும். பணவரவு அதிகரிக்கும். எதிலும் முதலீட்டை அதிகப்படுத்த வேண்டாம்.

**மிதுனம்**
குடும்ப ஒற்றுமை சிறக்கும். நிதி நிலையில் மாற்றமில்லை. குடும்பம், தொழிலில் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**கடகம்**
நிம்மதி நிலைக்கும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். குடும்பத் தேவைக்கான பணத்தேவை பூர்த்தியாகும். கடந்த கால முயற்சிக்கு இப்போது நற்பலன் கிடைக்கும்.

**சிம்மம்**
பணியிடத்தில் போட்டி அதிகரிக்கும். சுபச்செலவு ஏற்படும். தடைகள் அகலும். மகிழ்ச்சி உண்டு. சாதனை படைப்பீர்கள். நண்பர்களால் உதவி உண்டு. உழைப்பால் உயர்வீர்கள்.

**கன்னி**
அதிகாரிகளின் ஆதரவால் நன்மை நிகழும். அரசின் சலுகை எதிர்பார்த்தபடி கிடைக்கும். கவலை தீரும். விரும்பிய ஆடம்பர பொருட்களை வாங்குவீர்கள்.

**துலாம்**
பிரச்னை தீரும். தன்னம்பிக்கையோடு செயல்படுவீர்கள். உபரி வருமானம் வருவதற்கான வழியைக் கண்டறிவீர்கள். நிம்மதியான நாள். தடைப்பட்ட வாய்ப்பு தானாக வரும்.

**விருட்சிகம்**
பெற்றோரின் ஆசி கிட்டும். நினைத்தது நிறைவேறும். நன்மைகள் ஏற்படுவதில் தடைகள் ஏற்படலாம். தடை குறுக்கிட்டாலும் கவலைப்பட வேண்டாம்.

**தனுசு**
உங்களின் திறமையை வியந்து அதிகாரிகள் பாராட்டுவர். எடுத்த முயற்சியில் வெற்றி உண்டு. கவலை நீங்கும். யோகமான நாள். நம்பிக்கையோடு செயல்படுவீர்கள்.

**மகரம்**
நம்பிக்கை துளிர் விடும். சகோதரரால் நன்மை உண்டு. உடல்நிலை சீராகும். முக்கியப் புள்ளிகளைச் சந்திப்பீர்கள். பணியில் வெற்றி உண்டு. விலகிச் சென்ற வரன்கள் மீளும்.

**கும்பம்**
பணிவுடன் இருப்பது நல்லது. உயர்பதவிகள் வரலாம். பெரிய முயற்சிகளில் ஏற்பட்ட குறுக்கீடு விலகும். பயம் நீங்கும். பணியாளர்களுக்கு நன்மை உண்டு.

**மீனம்**
எதிர்பார்த்ததை விடக்கூடுதல் வருமானம் வரும். மனக்குழப்பம் அகலும். எதிரிகள் மனம் மாறுவர் சொந்தங்களை அரவணைத்து மகிழ்வீர்கள். சோம்பலை உதறுவீர்கள்.

# கமல் கட்சியின் துணை தலைவர் உட்பட 78 நிர்வாகிகள் தி.மு.கவில் இணைவு

## மேலும் 11 ஆயிரம் பேர் இணையவிருப்பதாக தகவல்



சென்னை, ஜுலை 10

கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சியின் துணைத் தலைவராக இருந்து அண்மையில் விலகிய மகேந்திரன் உட்பட பலர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர், தி.மு.க. தலைவர் ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்துள்ளார்கள்.

அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் பேசிய மகேந்திரன், “நான் தி.மு.கவின் தொண்டனாக அரசியல் பயணத்தைத் தொடங்கியுள்ளேன். என்னோடு மக்கள் நீதி மய்யம் கட்சியை சேர்ந்த 78 நிர்வாகிகளும் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் தி.மு.கவில் இணையும் 11 ஆயிரத்து 188 பேரின் விவரங்கள் அடங்கிய தொகுப்பையும் தலைவரிடம் ஒப்படைத்துள்ளேன்.

என்னுடைய அரசியல் பயணம் இரண்டரை வருடம் தான். நான் நம்பிக்கையாக மக்கள் நீதி மய்யம் கட்சியில் இணைந்தேன். ஆனால், அங்கே தலைமையின் செயல்பாடு சரியாக இல்லை. இந்த இரண்டு மாதத்தில் தி.மு.க. அரசின் செயல்பாடு மக்களுக்காக இருப்பதால், நான் தி.மு.கவுக்கு வந்துள்ளேன். எனக்கு என்ன பொறுப்பு கொடுக்கவேண்டும் என்பது தலைவருக்கு தெரியாமலா இருக்கும்” என்று கூறினார்.

இணைப்பு விழாவில் பேசிய முதல்வரும் தி.மு.க. தலைவருமான ஸ்டாலின், “நான் தேர்தல் அறிவித்தபோதே இவருக்காக ரொம்ப நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், இப்போது கொஞ்சம் லேட் ஆக வந்திருக்கிறார். சுப்பர் ஸ்ரார் அவர்கள் ஒரு படத்தில் “லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வருவேன்.” என்பார். அதுபோல ‘லேட்’டாக வந்தாலும் லேட்டஸ்டாக வந்திருக்கும் மகேந்திரன் உள்ளிட்ட சகோதரர்களை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு என்ன ஒரு கவலை என்றால், தேர்தலுக்கு முன்னால் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் கோவையில் நாம் மிகப்பெரிய வெற்றியை அடைந்திருக்க முடியும். மகேந்திரன் அப்போதே வந்து சேர்ந்திருந்தால் அந்தக் கவலையும் இப்போது இல்லாமல் போயிருக்கும்” என்று குறிப்பிட்டார் ஸ்டாலின்.

# தமிழக பா.ஜ.க. தலைவராக அண்ணாமலை

சென்னை, ஜுலை 10,

தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த எல்.முருகன் ஒன்றிய அமைச்சராகப் பொறுப்பேற்ற நிலையில், முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியும் தற்போதைய பா.ஜ.க. துணைத் தலைவருமான அண்ணாமலை தமிழக பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த எல்.முருகன் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அமைச்சரவையில், மீன்வளம் கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை, தகவல் ஒளிபரப்புத் துறை இணையமைச்சராக நியமிக்கப்பட்டு நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா தமிழக பா.ஜ.க. தலைவராக அண்ணாமலை நியமிக்கப்படுவதாக அறிவித்தார். கர்நாடக மாநில பிரிவைச் சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரியான அண்ணாமலை 2019ஆம் ஆண்டு தனது பதவியை ராஜினாமா செய்தார். அப்போது அவர் தெற்கு பெங்களூர் துணை ஆணையராக பதவியில் இருந்தார்.

ஐ.பி.எஸ். அதிகாரி பதவியை ராஜினாமா செய்த போது அவர் அரசியலில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கவில்லை. பின்னர் 2020 ஒகஸ்ட் 25 ஆம் திகதி பா.ஜ.கவில் இணைந்தார்.

இதுகுறித்து அவர் கூறிய போது -

அச்சமின்மை, தைரியம், ஊக்கம், அறிவு ஆகியவற்றைப் பிரதமர் மோடியிடமும் பா.ஜ.க. தலைவர்களிடமும் நான் காண்கிறேன். இதன் காரணமாக பா.ஜ.கவில் இணைந்து கட்சியை வலுப்படுத்த முடிவு செய்தேன். எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் தான் பா.ஜ.கவிற்கு வந்தேன். தலைமை என்ன முடிவு செய்கிறதோ அதை ஏற்பேன் என்று கூறியிருந்தார்.

# சென்னை திரும்பினார் ரஜினிகாந்த் விமான நிலையத்தில் பெரும் வரவேற்பு




சென்னை, ஜுலை 10,

மருத்துவ பரிசோதனைக்காக அமெரிக்கா சென்றிருந்த நடிகர் ரஜினிகாந்த், நேற்று அதிகாலை 3 மணிக்கு சென்னை திரும்பினார். சென்னை விமான நிலையம் வந்தடைந்த சுப்பர் ஸ்ரார் ரஜினிக்கு அவரின் ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக, ரஜினிகாந்த் கடந்த ஜுன் மாதம் 19-ஆம் திகதி தனி விமானத்தில் அமெரிக்கா சென்றார். அங்கு புகழ்பெற்ற மயோ மருத்துவமனையில் சிறுநீரக அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான வழக்கமான பரிசோதனை அவருக்கு செய்யப்பட்டது. தொடர்ந்து அவர், மகள் ஐஸ்வர்யாவுடன் சாலையில் நடந்து செல்வது, ரசிகர்களை சந்தித்தது உள்ளிட்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டது. இந்நிலையில் அமெரிக்க பயணத்தை முடித்த ரஜினி தனி விமானம் மூலம் சென்னை திரும்பியுள்ளார்.

அதிகாலை 3 மணிக்கு சென்னை விமான நிலையம் வந்தடைந்த ரஜினிக்கு அவரின் ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். “தலைவா..., தெய்வமே” என அவரின் ரசிகர் கள் கோஷமிட்டனர். ரஜினியை நேரில் கண்ட சில ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். ரசிகர்களை கும்பிட்டு வணக்கம் செலுத்தினார். பின்னர் காரில் ஏறி அவர் புறப்பட்டு சென்றார். ரஜினி ரசிகர்களின் வருகையால் சென்னை விமான நிலையம் அதிகாலையிலேயே பரபரப்பாக காணப்பட்டது.

# தரம் 5 புலமைப்பரிசில், ஏ.எல். பரீட்சை திகதி மீள அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

ஓகஸ்ட் மாதம் நடைபெற விருந்த 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் சாதாரணதரப் பரீட்சை திகதிகளை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 4ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 29ஆம் திகதிவரை இடம்பெறுகிறது.

க.பொ. த. சாதாரணதரப் பரீட்சை 2022ஆம் ஆண்டு ஜனவரியில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இல்லாததால் பாடத்திட்டங்கள் முறையாக முடிக்கப்படவில்லை என்பதே பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### மக்களின் கைதுக்கு எதிராக

# அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்தது சஜித் தரப்பு!

கொழும்பு, ஜூலை 10

தனிமைப்படுத்தல் சட்டத்தின் அடிப்படையில் மக்களை கைது செய்கின்றமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதான எதிர்க்கட்சியினரான ஐக்கிய மக்கள் சக்தியினரால் நேற்று குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்ட வழிகாட்டுதல்களை பயன்படுத்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்பவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் எடுக்கும் நடவடிக்கையின் ஊடாக அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக தீர்ப்பளிக்குமாறு அவர்கள் அந்த மனுவின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னார் மீனவர்களுக்கும் மாணவர்களுக்கும் பைசர்!

### சவேந்திர சில்வா அறிவிப்பு



**கொழும்பு, ஜூலை 10**

**இலங்கைக்குக் கிடைத்துள்ள ஒரு தொகுதி பைசர் தடுப்பூசியை உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு வழங்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.**

பல நாடுகள் சினோபார்ம் தடுப்பூசியை நோய்த்தடுப்பு மருந்தாக ஏற்காததால் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்களுக்கு வழங்கப்பட்டு மீதமுள்ள தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என இராணுவத் தளபதியும் கொவிட் தடுப்பு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குக் கிடைத்த பைசர் தடுப்பூசிகளை முதலில் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியாக வழங்க முன்னர் முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் இலங்கைக்கு இம்மாதம் 3 ஆம் வாரத்தில் 1.4 மில்லியன் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி நாட்டுக்கு வரும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனால் முதலில் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி பெற்றவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியாக பைசர் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிலையிலேயே பைசர் தடுப்பூசியை உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கும் மன்னார் கடற்றொழிலாளர்களுக்கும் வழங்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 - 09 - 1951 |  | 02 - 07 - 2021 |

## திருமதி இராசம்மா சிவசுப்பிரமணியம்

துன்னாலை மத்தி கரவெட்டி கோவிற்கடவையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto, Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராசம்மா சிவசுப்பிரமணியம் கடந்த (02.07.2021) வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தவனம் – கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் – கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியனின் பாசமிகு மனைவியும், சுரேஷ்குமார், ரமேஷ்குமார், சபேஷ்குமார், காலஞ்சென்ற சதீஷ்குமார், நரேஷ்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், இலட்சுமிபிள்ளை, குணமணி, தங்கம்மா, கமலாம்பிகை, பாலசுந்தரம், சிவசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரஜினி, சத்தியபிரதீபா, ரோஜிதா, சதிந்தினி, பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கமலாம்பிகை, வேலாயுதம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான பொன்னுதுரை, கதிரவேலு, தயாமதி மற்றும் மங்களேஸ்வரி, தணேஸ்வரன், தவமணி, கணேஷலிங்கம், சாவித்திரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சாரதா, புஸ்பலதா, கந்தவேல், குணசேகர், சுகந்தி, ரவிக்குமார், ரதி, ராதா, உதயகுமார், பாலகுமார், தனரூபி, கஜன் ஆகியோரின் பாசமிகு சீனியம்மா வும், காலஞ்சென்றவர்களான சுதாமதி, தனமதி மற்றும் அரவிந்தன், அகிலன், அஷ்வினி, அனந்தன், சந்தோஷ், சாருக், சபீனா ஆகியோரின் அன்பு மாமியாரும், குமுதினி, குபேரி, கபிலா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ரிஷி, ஆஷா, லக்ஷா, ஓவியா, பிருந்தா, பபித்தா, சுவாதி, சித்தார்த், யாத்வி, யதன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், செந்துரன், கஸ்தூரி, வேல், சக்தி, அபிராமி, கார்த்திகேயன், சுஜிவன், அபிராமி, பூஜா, நவீன், பிரவீன், ரோகிந், சிறீராம், கீர்திகா, ஆகாஷ், ஆதீஷ், ஆரூஷ், ரெமா, மகா, ஆரியா, நேகா, ஜோஷ், காவியா, கார்திகா, ரியா, மைரா, கைலன், சஞ்சீவி, சுரேன், அகநிலா, தயந்தன், அகானா, கயல், அஜய், சர்வினி, சர்வின், பிரிதன், கனிகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 17 Jul 2021 6:00 PM - 9:00 PM, Sunday, 18 Jul 2021 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை :*
Sunday, 18 Jul 2021 8:30 AM - 10:00 AM

*தகனம் :*
Sunday, 18 Jul 2021 10:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**நரேஷ்குமார் - மகன்**
Mobile : +17072906962

தகவல்
**குடும்பத்தினர்.**

# கொரோனா சட்டத்தை மீறிய மேலும் 266 பேர் சிக்கினார்கள்

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

“நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 266 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.”

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

இதுவரை தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 48 ஆயிரத்து 808 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# அண்ணனின் காதை கடித்து காயப்படுத்தினார் தம்பி!

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சி-நாவற்குழிப் பகுதியில் அண்ணன்-தம்பி இடையே இடம்பெற்ற மோதலில் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

நாவற்குழிப் பகுதியில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் அண்ணனின் காதை தம்பியார் கடித்து காயப்படுத்தியுள்ளார்.

இதனால், கோபமடைந்த அண்ணன் அருகில் இருந்த தராசை தூக்கி தம்பியின் தலையைப் பதம் பார்த்திருந்தார். தலை மற்றும் காதுப் பகுதியில் படுகாயமடைந்த 32 மற்றும் 37 வயதான சகோதரர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# வெளிநாடுகளில் பணிக்குச் சென்ற 124 இலங்கையர் தொற்றினால் பலி

கொழும்பு, ஜூலை 10

வெளிநாடுகளில் பணியாற்றும் 124 இலங்கையர்கள் இதுவரை கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர்.

16 நாடுகளில் பணிபுரிந்து வரும் புலம்பெயர்ந்த மக்கள் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த தொழிலாளரின் நேரடி உறவினருக்கு இழப்பீடு விநியோகிக்கப்படுவதாகப் பணியகம் கூறியது.

இதேவேளை, கொவிட் தொற்றுநோயால் இலங்கைக்குத் திரும்புவதற்காக 27,000 இலங்கை வெளிநாட்டவர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உலகளவில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதில் இருந்து கிட்டத்தட்ட 65,000 புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு திரும்பியுள்ளனர்.

# வெளிநாட்டவரின் வீஸா நீடிப்பு!

கொழும்பு, ஜுலை 10

நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டினரின் அனைத்து வகை வீஸாக் களின் செல்லுபடியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த காலை எல்லை எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக் களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவி வரும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாகவே இவ்வாறு வீசாக்களின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

# ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவது அடிப்படை உரிமை மீறலாகும்!

## சபையில் எதிர்க்கட்சியினர் போர்க்கொடி

**கொழும்பு, ஜுலை 10**

**ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை ஒடுக் கும் செயல்பாடானது, அடிப்படை உரிமை மீற லாகும் என பாராளுமன்றில் நேற்று வெள்ளிக் கிழமை எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.**

மேலும், கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தியுள்ளமையானது, தனி மைப்படுத்தல் சட்டத்திற்கு எதிரான செயல்பாடு என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

சேர் ஜோன் கொத்தலாவ தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகச் சட்டமூலத்தை உடனடி யாக மீள பெறுமாறு வலியு றுத்தி, நேற்றுமுன்தினம் பத்தர முல்லை, பாராளுமன்ற சுற்று வட்டத்துக்கு முன்பாக பாரிய போராட்டமொன்று முன் னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் கள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்துகொண்டு குறித்த சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இந்தப் போராட் டமானது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவதாகக் குற்றஞ் சாட்டி, ஆர்ப்பாட்டக்காரர் களை பொலிஸார் கைது செய்ய முற்பட்டபோது அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த பௌத்த பிக்குகள், பெண்கள், வயோ திபர்கள் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலா ளர் ஜோசப் ஸ்டாலின் உள் ளிட்ட 31 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் கொழும்பு நீதிமன் றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது, இவர்கள் அனைவருக் கும் பிணை வழங்கப்பட்டது.

எனினும், குறித்த நபர்கள் அனைவரும் பொலிஸாரினால் நேற்று முன் தினம் தனிமைப் படுத்தலுக்காக முல்லைத் தீவுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இதனால் நேற்று முன் தினம் நீதிமன்றுக்கு முன்பாக பெரும் பதற்றம் ஏற் பட்டதோடு, பொலிஸாரின் இந்தச் செயல்பாடானது சமகால அரசியலிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னணியின் உறுப்பினர் விசாரணைக்கு அழைப்பு

வவுனியா, ஜுலை 10

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தரான ப. தவபா லனை பொலிஸார் விசார ணைக்கு அழைத்துள்ளனர்.

கொரோனாவின் தாக்கம் காரணமாக கடந்த காலங்களில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு பல உதவிகள் வழங் கப்பட்டிருந்தன.

அந்தவகையில் மஸ்கெலியா பகுதியில் கொரோனா இடர் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்க ளுக்காக வவுனியாவில் பொருட்களை சேகரித்து தமிழ்த் தேசிய மக்கள் முண் ணனி ஊடாக ப. தவபாலன் முன்னின்று வழங்கியிருந்தார்.

இவ்வாறான உதவியை மேற்கொண்டமைக்காக குறித்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

பணியின் நிமித்தம் அவர் வெளியே சென்றிருந்த சமயம் அவரது வீட்டுக்கு சென்ற பொலி ஸார் சிங்கள மொழியில் எழுதப் பட்ட அழைப்பாணையை வழங்கி எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வரு மாறும் கூறிச்சென்றுள்ளனர்.

# அடுத்துவரும் நாட்களில் நாட்டில் தொற்றாளர் எண்ணிக்கை உயரும்!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 10

அடுத்துவரும் சில நாட் களில் நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோ தகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளார்.

வேலைநிறுத்தப் போராட் டம் காரணமாக, கடந்த சில நாட்களாக மாதிரிப் பரிசோ தனைகள் மேற்கொள்ளப்படாத நிலையில், பெருமளவான மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாகவே, தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# வவுனியாவில் கத்திக்குத்து; குடும்பஸ்தர் படுகாயம்!

## சந்தேகநபரை தேடி பொலிஸ் வலைவீச்சு

வவுனியா, ஜுலை 10

வவுனியா- பெரியார்குளம் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர், வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு குறித்த நபர், மகாறம்பைக்குளம் பகுதி யில் இருந்து பெரியார்குளம் நோக்கி ஓட்டோவை ஓட்டி சென்றுள்ளார்.

இதன்போது இடையில் வழிமறித்த பெரியார்குளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர், அவரை கத்தியால் கடுமையாக தாக்கியுள்ளார்.

குறித்த சம்பவத்தினால் படுகாயமடைந்த அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ள னர்.

இந்நிலையில் சம்பவத்து டன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# சு.கவின் ஆதரவில்லாமல் 2019இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காது

## தயாசிறி ஜயசேகர கூறுகின்றார்

கொழும்பு, ஜுலை 10

சிறீலங்கா சுதந்திர கட்சி பொதுஜன பெரமுனவுக்கு ஆத ரவு வழங்காமலிருந்திருந்தால் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கடந்த காலத்தை நினைவுப டுத்திக் கொள்ளவேண்டும் என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலை வர் மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்ற கட்சியின் செயல்குழு கூட்டத்தை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடு கையில்-

பொதுஜன பெரமுன தலை மையிலான கூட்டணியில் பங் காளி கட்சியாக உள்ளோம் என்ற காரணத்துக்காக பேச்சு சுதந்திரம் தடை செய்யப்பட வில்லை. வழங்கப்பட்டுள்ள



அமைச்சுக்கள் நகைச் சுவையானது என்று குறிப்பிட் டேன். இதனை கொண்டு ஆளும் மற்றும் எதிர்த்தரப்பின் உறுப்பினர்கள் பல கருத்துக் களை முன்வைத்துள்ளார்கள்.

பற்றிக் கைத்தறி மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சை இராஜி னாமா செய்யத் தயாராக உள் ளேன். இத்தீர்மானத்தை சுதந் திரக் கட்சியின் தலைவர் மற் றும் செயல்குழுக் கூட்டத்திலும் குறிப்பிட்டுள்ளேன். பதவி விலகுமாறு அவர்கள் பணித் தால் நிச்சயம் பதவி விலகு வேன்.

2019 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங் காமல் இருந்திருந்தால் இன்று ஜனாதிபதி கோட்டாபய பிரதமர் மஹிந்த ஆகியோர் ஆட்சியதிகாரத்தில் இருந்திருக்கமாட்டார்கள்.

சுதந்திரக் கட்சியை விமர் சிக்கும், இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உள்ளிட் டோர் கடந்த காலத்தை நினைவுப்படுத்திக்கொள்ள வேண்டும். சுதந்திரக் கட்சியை புறக்கணிக்க நினைப்பது பெரும் அரசியல் துரோக மாகவே கருதப்படும்.

செயல்குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தில் வெளியேறு வோம் என ஒரு தரப்பினரும், வெளியேறுவதற்கான தருணம் இதுவல்ல என பிறிதொரு தரப் பினும் குறிப்பிட்டுள்ளார்கள். அரசாங்கத்திலும், கூட்டணி யிலும் காணப்படும் பிரச் னைகளுக்கு இரு தரப்பு பேச்சு ஊடாக தீர்வு கண்டு இணக் கமாக செயல்பட எதிர் பார்த் துள்ளோம்-என்றார்.

# அலைபேசியில் புலி சின்னம் வைத்திருந்த இளைஞன் கைது!

கிளிநொச்சி, ஜுலை 10

தமிழீழ விடுதலைப் புலிகள், நாம் தமிழர் கட்சி மற்றும் ஆவா குழுவின் சின்னம் எனக் கூறப்படும் சின்னங்களை தனது அலைபேசியில் வைத்திருந்த இளைஞன், கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரும்பு வாள் ஒன்றை மறைத்த வைத்திருக்கின்றார் என விசேட அதிரடிப்படையி னரின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல்களின் அடிப் படையிலேயே கிளிநொச்சி உதயநகர் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன், நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து வாள் ஒன் றும், அலைபேசிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவ்விரு அலைபேசி களையும் சோதனையிட்ட போது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, நாம் தமிழர் கட்சி மற்றும் ஆவா குழுவின் புகைப்படங்கள் இருந்தமை அவதானிக்கப் பட்டுள்ளது. அத்தோடு வாள் களுடன் இளைஞர் ஒருவர் இருக்கும் புகைப்படமும் காணப்பட்டது என பொலி ஸார் தெரிவித்தார்.

அந்த புகைப்படத்துடன் இருக்கும் இளைஞன் தொடர் பிலும் விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

(அ)

# யாழ்.குடாவில் தொடரும் கொரோனா பலியெடுப்பு

## ஒரு வாரத்தில் 12 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். குடாநாட்டில் கொரோனா உயிரிழப்புகள் அண்மை நாட்களில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தொற்றாளர்களது எண்ணிக்கை கணிசமாக வீழ்ச்சியடைந்து வருகின்ற போதிலும் நாளாந்த உயிரிழப்புகள் தொடர்ச்சியாக பதிவாகும் நிலை நீடித்து வருகிறது.

யாழ். மாவட்ட கோவிட்-19 புள்ளிவிபர அறிக்கையின் அடிப்படையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஜூலை 01 முதல் ஜூலை 07 வரையான ஒரு வாரத்தில் மட்டும் இவ்வாறு 12 கோவிட்-19 மரணங்கள் யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

ஜூலை - 01 - 4 மரணங்கள்
ஜூலை - 02 - 2 மரணங்கள்
ஜூலை - 04 - ஒரு மரணம்
ஜூலை - 05 - ஒரு மரணம்
ஜூலை - 06 - 3 மரணங்கள்
ஜூலை - 07 - ஒரு மரணம்

இதையடுத்து யாழ். மாவட்டத்தில் ஜூலை -07 வரையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 107 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டதிதில் இதுவரை ஏற்பட்ட கோவிட்-19 மரணங்கள் தொடர்பான விபரம், மொத்த உயிரிழப்பு பிரதேச செயலர் பிரிவு வாரியாக -

- யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் - 33 பேர்
- கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் - 12 பேர்
- நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் - 12 பேர்
- உடுவில் பிரதேச செயலர் பிரிவில் - 09 பேர்
- சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் - 08 பேர்
- பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் - 08 பேர்
- சங்கானை பிரதேச செயலர் பிரிவில் - 08 பேர்
- தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் - 05 பேர்
- கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் - 03 பேர்
- சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் - 03 பேர்
- வேலணை பிரதேச செயலர் பிரிவில் - 03 பேர்
- காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் - 02 பேர்
- ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் - ஒருவர்



# பஸிலிடமிருந்து சில துறைகள் மஹிந்தவுக்கு!

## திருத்தப்பட்ட புதிய வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஜூலை 10

**புதிதாக நிறுவப்பட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்வுக்கு ஒதுக்கப்பட்ட பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு மற்றும் பஸில் ராஜபக்ஷ பொறுப்பேற்ற நிதி அமைச்சுக்கான துறைகளில் சில திருத்தங்களுடன் திருத்தப்பட்ட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.**

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் ஒதுக்கப்பட்ட மத்திய கலாசார நிதியம் உட்பட பல துறைகள் திருத்தப்பட்ட வர்த்தமானியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

புதிய பாராளுமன்ற உறுப்பினராக நேற்று முன் தினம் பொறுப்பேற்ற பஸில் ராஜபக்ஷவுக்கு நிதி அமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டது. பிரதமர் மஹிந்த வசம் இருந்த நிதி அமைச்சு பொறுப்பே பஸிலுக்கு வழங்கப்பட்டது.

நிதி அமைச்சுக்குப் பதிலாக புதிதாக நிறுவப்பட்ட பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு பிரதமருக்கு ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எதிர்க்கட்சி எம்.பிக்களுடன் ரணில் முக்கிய ஆலோசனை

கொழும்பு, ஜூலை 10

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

எதிர்கால அரசியல் பயணம் குறித்து இதன்போது அவர் கலந்துரையாடினார் என்று ரணில் விக்ரமசிங்கவுக்கு நெருக்கமான தரப்புக்களை கோடிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் வைத்து அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்பை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பான மேலதிக தகவல்கள் வெளியாக வில்லை.

# ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட 16 பேரும் மோசமான சூழலில் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூலை 10

தனிமைப்படுத்தல் விதிகளை மீறி பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட 16 பேரும் முல்லைத்தீவு விமானப் படை தனிமைப்படுத்தல் மையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் அவர்கள் மோசமான சூழலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அவர்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அந்தச் சூழலை விவரிக்கும் வகையில் அமைந்துள்ளன.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தொடர்பான புதிய சட்டத்திருத்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உயர் கல்வித் துறை இராணுவ மயமாக்கப்படுவதைக் கண்டித்தும் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின்பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட 33 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன் தினம் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு 25 ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட16 பேரை தனிமைப்படுத்த நீதிமன்றில் பொலிஸார் கோரிக்கை முன்வைத்தனர். எனினும் தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மன்றுக்கு இல்லை எனத் தெரிவித்த நீதிவான், சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலுடனேயே இதனைச் செய்ய முடியும் என உத்தரவிட்டார்.

இதனையடுத்து சுகாதார அதிகாரிகளின் ஒப்புதலுடன் அவர்கள் முல்லைத்தீவு விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யவேண்டும்

## ரணில் சபையில் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 10

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஊடாக அடிப்படை உரிமைகளை மீறும் வகையில், செயல்பட முடியாது. அப்படியென்றால், அந்த சட்டத்தில்தான் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், "ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் 16 புலிகளை அரசாங்கம் விடுதலை செய்தது. இந்த நிலையில், நேற்று (நேற்று முன்தினம்) கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெரிந்த ஒரு நபராகவே இருந்து வருகிறார். போராட்டங்களை நடத்த பொது மக்களுக்கு உரிமையுள்ளது. தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு இணங்க, போராட்டங்களை நடத்த வேண்டாம் என தடை செய்ய அதிகாரம் கிடையாது. - என்றார்.

# லம்ப்டா கொரோனா வைரஸ் பிறழ்வு இலங்கையிலும் பரவும் அபாயநிலை



கொழும்பு, ஜூலை 10

லம்ப்டா கொரோனா வைரஸ் பிறழ்வு இலங்கையிலும் பரவுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

லம்ப்டா வைரஸ் பிறழ்வு தொடர்பில் சுகாதார அமைச்சு மிகுந்த அவதானத்துடன் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக வும், இந்த வைரஸ் பிறழ்வுக் கான மாதிரிகளை தொடர்ந்தும் பரிசோதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

லம்ப்டா கொரோனா வைரஸ் பிறழ்வு நாட்டுக்குள் பரவாதிருப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



■ செந்தமிழ்ச்சொல்லருவி
சந்திரமௌலீசன் லலீசன்

# வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற சிறப்பிற்குரிய கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் (10.07.2021) ஆரம்பமாகிறது. எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழா.

மகா எசல பெரஹரா என்ற பெயரில் கதிர்காம உற்சவம் ஆலயத்தாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு கோவிட் நெருக்கடி காரணமாக அனுமதி பெற்ற அடியவர்கள் சிலருடன் மாத்திரம் திருவிழா இடம்பெறவுள்ளதாக மொனராகலை மாவட்டச் செயலர் குணதாச அமரசிங்க ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

சைவப் பெருமக்கள் ஆடித் திருவோணத்தை கதிர்காமத் தீர்த்தநாளாகக் கொண்டு வழிபாடாற்றும் வழக்கத்தைக் காலம் காலமாகக் கைக்கொண்டு வருகின்றனர்.

கதிர் என்பது ஒளியைக் குறிக்கிறது. காமம் என்பது அன்பு என்ற பொருளைத் தருகின்றது. கம என்ற சொல் கிராமத்தைக் குறிப்பதாகக் கூடக் கொள்ளலாம். வேலவனின் கிராமம் - கதிர் வேலவனின் அன்புக்குரிய தலம் என்ற பொருள்களில் கதிர்காமம் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகின்றது.

முருகப் பெருமான் வேடர் குலப் பெண்ணாகிய வள்ளிநாச்சியாரைக் கரம்பற்றிய தலமாகக் கதிர்காமத்தைக் கொள்வர். வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறைவோனே என்று அருணகிரியார் பாடுவதையும் இங்கு சுட்டலாம்.

தற்போதுள்ள கதிர்காம ஆலயத்தை 1634ஆம் ஆண்டு இரண்டாம் இராஜசிங்கன் கட்டியதாக அதன் வரலாறு தெரிவிக்கின்றது. வன வேடர் பூசை செய்யும் சிறப்புப் பெற்றதால் அவர்கள் வழி வந்தோர் இன்றும் பாரம்பரியம் காத்துப் பூசை செய்யும் மரபைப் பேணுகின்றனர். இவர்கள் சிங்கள மொழி பேசுபவர்களாக இருப்பதால் சிங்கள மக்கள் சார்ந்த பாரம்பரியமே கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது.

கந்தபுராணத்தில் குறிப்பிடப்படும் ஏமகூடமே கதிர்காமம் என்ற நம்பிக்கை சைவர்களிடையே உண்டு. முருகப் பெருமான் சூரபத்மனை சங்கரிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்று மாணிக்க கங்கை அருகில் பாசறை அமைத்துத் தங்கியிருந்ததாக புராணச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இலங்கையில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சங்கமித்து வழிபாடாற்றும் தலமாகக் கதிர்காமம் விளங்குகின்றது. வடக்கு கிழக்கில் இருந்து கால் நடையாக - பாத யாத்திரையாகப் பக்தர்கள் கதிர்காமம் செல்வது வழக்கம். யாழ்ப்பாணத்தில் இருந்து ஐம்பது தொடக்கம் அறுபது நாள்கள் நடந்து பாத யாத்திரை செல்லும் வழக்கம் கோவிட் பேரிடர் காலத்திற்கு முன்பும் காணப்பட்டது. யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதியில் இருந்து புறப்பட்டு முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு உகந்தை ஜால வனம் என மிக நீண்ட பாதையூடாக அடியவர்கள் பயணம் செய்வர். தமது யாத்திரையின் போது முருகனும் கூட வருவதாக நம்பிக்கை கொள்வர்.

கதிர்காமக் கந்தனின் சக்திக்கு ஆட்பட்ட யாழ்ப்பாணத்தவர்கள் பல ஊர்களில் சின்னக்கதிர்காமம், செல்லக் கதிர்காமம், பாலகதிர்காமம் எனக் கதிர்காமத்தின் பெயரில் ஆலயங்களை அமைத்து வழிபடுகின்றனர். ஈழத்தின் முதற்பள்ளுப் பிரபந்தமாக விளங்கும் கதிரைமலைப்பள்ளு கதிர்காமக் கந்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த நூல் ஆகும். செங்கை ஆழியான் எழுதிய ஆச்சி பயணம் போகிறாள் என்ற நாவல் - கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்லும் வயோதிப மாது ஒருவர் பற்றிய கதை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அருணகிரியார் இலங்கை வந்து கதிர்காமக் கந்தனைத் தரிசித்திருக்கலாம் என்ற நம்பிக்கையும் உண்டு. வடக்கில் யாழ்ப்பாணாயன் பட்டினம் மருவிய பெருமாளே என நல்லைக் கந்தனைப் பாடி பின் கால் நடையாகப் பயணம் செய்யும் வழியில் திருகோணமலைப் பெருமான் மீது பாடி கதிர்காமக் கந்தன் மீது பல பாடல்களைப் பாடி அருணகிரியார் பக்தி செய்துள்ளார்.

'மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள்

மணிதரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காமப் பெருமாள்' என அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

அருணகிரியாருடைய திருப்புகழை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மாணிக்கத்தால் செய்த விலை மதிக்கமுடியாத திருவுருவம் இந்தத் தலத்தில் இருந்திருத்தல் வேண்டும் எனக் குல. சபாநாதன் குறிப்பிடுகின்றார். கதிர்காமத்தைத் தரிசித்த டொக்டர் டேவி அவர்கள் 'பெருங்கலவரம் நிகழ்ந்த காலத்தில் முருகனின் திருவுருவம் காட்டில் மறைக்கப்பட்டு விட்டதாகச் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

தற்போது கதிர்காமக் கந்தனாக நாம் தரிசிக்கும் பெருமான் ஆறுமுக வேலவர் வள்ளி தெய்வயானையுடன் மயில் மீது அமர்ந்து அடியார்களுக்கு அருள்புரியும் காட்சியாக சித்திரத்தில் வரையப்பட்ட திருக்கோலம் ஆகும். திரைச்சீலை வடிவில் பெருமானைத் தரிசித்தி பக்தி கொள்ளும் சிறப்பு இத்தலத்திற்குத் தனித்துவமானது.

கதிர்காமக் கந்தனின் பெருந்திருவிழா நடைபெறும் 15 அல்லது 16 நாள்களும் கடுமையாக விரதம் இருந்து வழிபாடாற்றும் மரபு சைவத் தமிழர்களிடம் காணப்பட்டது. கோவிலுக்கும் சைவத்தமிழ் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் நலிவுற்றுள்ளமையால் இன்று விரதம் அனுட்டித்து வழிபாடாற்றும் சைவத் தமிழ் பக்தர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது.

வடக்கு - தெற்கு உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பவல்ல புனிதத் தலமாக கதிர்காமம் விளங்கும் நிலையில் - முன்னைய கால நடைமுறைகளைத் தமிழ் மக்கள் கைக்கொள்ளும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இன நல்லிணக்கத்திற்கான வழியையும் இந்தத் திருவிழா ஏற்படுத்திக் கொடுக்கும்.

கட்டுரையாளர் : பிரதி முதல்வர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

# கச்சா எண்ணெய் விலை ஏற்றத்துக்கு 2 இளவரசர்களின் சண்டை காரணமா?

■ சமீர் ஹஸ்மி

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சௌதி அரேபியாவுக்கு இடையில் கச்சா எண்ணெய் உற்பத்தி அளவு மாற்றம் தொடர்பாக நடந்த சில கசப்பான சம்பவங்களால், தற்போது கச்சா எண்ணெய் விலை கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு புதிய உச்சங்களைத் தொட்டு இருக்கிறது.

ஒபெக் என்கிற கூட்டமைப்பில், கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் ஒபெக் கூட்டமைப்பு நாடுகளோடு, ரஷ்யா போன்ற நாடுகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த கூட்டமைப்பு தன் கச்சா எண்ணெய் உற்பத்தி தொடர்பான பேச்சுக்களை காலவரையின்றி ஒத்தி வைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருகிறது. இது ஒபெக் கூட்டமைப்பின் நிலைத்தன்மை குறித்த அச்சம் நிலவத் தொடங்கி இருக்கிறது.

கடந்த வாரம், கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கலாம் என ஒபெக் அமைப்பின் தலைவர்களான சௌதி அரேபியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் கூறின. ஆனால், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அத்திட்டத்தை நிராகரித்தது. இந்த முரண்பாட்டில் இருந்து தான் பிரச்சனை தொடங்கியது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸோ, தன் கோட்டா அளவை மாற்ற விரும்புகிறது. அந்த கோட்டா வரம்பை அடிப்படை அளவாக வைத்து தான் உற்பத்தியைக் கூட்டுவது, குறைப்பது எல்லாம் நடக்கும். ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இந்த கோரிக்கையை சௌதி அரேபியாவும், ரஷ்யாவும் ஆமோதிக்கவில்லை.

கூட்டாளிகளான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சௌதி அரேபியாவின் எரிசக்தித் துறை அமைச்சர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை பொது வெளியில் கூறினர்.

“இந்த முரண்பாடுகள் ஆச்சரியமானவை தான், ஆனால், இந்த சச்சரவுகள் தவிர்க்க முடியாதவை” என வாஷிங்டன்னில் இருக்கும் ஸ்ட்ராட்டஜி அண்ட் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் அமைப்பைச் சேர்ந்த பென் கஹில் கூறுகிறார்.

“அபுதாபியின் உற்பத்தி கோட்டா அளவு, அவர்களுக்கு சாதகமாக இல்லை. ஏற்கனவே அபுதாபி தன் உற்பத்தியைப் பெருக்க நிறைய முதலீடு செய்து இருந்தது. தற்போது கச்சா எண்ணெய்க்கான தேவையும் அதிகரித்து வருகிறது. இப்போதும் தன் உற்பத்தி அளவை அதிகரிக்க முடியதாததால்தான் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விரக்தி அடைந்திருக்கிறது” என்கிறார் பென்.

**இருநாட்டு இளவரசர்களுக்கு இடையிலான உறவு**

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சௌதி அரேபியாவுக்கு இடையிலான நட்பு கடந்த பல ஆண்டுகளாக ஒட்டுமொத்த அரபு உலகத்தின் பூகோள அரசியலை தீர்மானித்தது.

சௌதி அரேபியாவின் இளவரசர் மொஹம்மத் பின் சல்மான் மற்றும் அபுதாபியின் இளவரசர் மொஹம்மத் பின் சயீத்துக்கு இடையிலான நட்பு இந்த உறவை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும் மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

இந்த இருவருமே இன்னும் அரசராக பதவியேற்றுக் கொள்ளவில்லை என்றாலும் தங்கள் தேசங்களின் அடுத்த அரசர்களாகவே கருதப்படுகிறார்கள். இரு இளவரசர்களுக்கும் சில பெரிய தொலைநோக்கு இலக்குகள் இருக்கின்றன.

இந்த இரு நாடுகளும் கடந்த பல ஆண்டுகளாக இராஜீக ரீதியிலான பல விவகாரங்களில் ஒருங்கிணைந்து பணியாற்றி இருக்கிறார்கள். கடந்த 2015ஆம் ஆண்டு யேமன் நாட்டில் ஈரானோடு ஒத்துப் போகும் ஹௌதி போராளிகளை எதிர்த்துப் போராட இந்த இரு நாடுகளும் இணைந்து ஒரு அரபு ராணுவக் கூட்டமைப்பைக் கட்டமைத்தார்கள். கடந்த 2017ஆம் ஆண்டு கத்தாரின் மீது ராஜரீக ரீதியிலான, வத்தக ரீதியிலான மற்றும் பயணம் தொடர்பான தடைகளை விதித்தார்கள்.

ஆனால், கடந்த இரு ஆண்டுகளுக்கு முன், யேமன் நாட்டில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தன் பெரும்பாலான படைகளை பின்வலித்த போது, அது சௌதிக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. இது இருநாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தியது.

கடந்த ஜனவரியில் கத்தார் மீதான தடைகளை விலக்கிக் கொள்ள சௌதி முன் வந்த போது அதை தயக்கத்தோடு ஏற்றுக் கொண்டது ஐக்கிய அரபு எமிரேட்ஸ்.

அதே போல கடந்த ஆண்டு இஸ்ரேல் நாட்டுடனான உறவுமுறை குறித்த விவகாரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் எடுத்த முடிவுகளில், சௌதி அரேபியாவுக்கு முழு உடன்பாடில்லை.

வரும் 2024ஆம் ஆண்டுக்குள் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் பிராந்திய தலைமையகத்தை, சௌதி அரேபியாவுக்குள் நிறுவ வேண்டும், இல்லை எனில் சௌதி அரேபியாவின் அரசு ஒப்பந்தங்களை பன்னாட்டு நிறுவனங்கள் இழக்க வேண்டி இருக்கும்

> **“ஐக்கிய அரபு எமிரேட்ஸோ, தன் கோட்டா அளவை மாற்ற விரும்புகிறது. அந்த கோட்டா வரம்பை அடிப்படை அளவாக வைத்து தான் உற்பத்தியைக் கூட்டுவது, குறைப்பது எல்லாம் நடக்கும். ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இந்த கோரிக்கையை சௌதி அரேபியாவும், ரஷ்யாவும் ஆமோதிக்கவில்லை.”**



என கடந்த பெப்ரவரி மாதம் ஒரு கெடு விதித்தது சௌதி.

இது ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முக்கிய நகரங்களில் ஒன்றான துபாயை குறிவைத்து தாக்குவதாகக் கருதப்பட்டது. மத்திய கிழக்கில் துபாய் ஒரு வணிக ஹப்பாக கருதப்படுகிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஒபெக் கூட்டமைப்பின் யோசனையை நிரகரித்ததால், பதிலடி கொடுக்கும் விதத்தில் சௌதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விமானங்களை ரத்து செய்தது. விமானங்களை ரத்து செய்ததற்கு கொரோனா திரிபுகளை காரணமாகக் கூறியது சௌதி.

இந்த தடை விதிக்கப்பட்ட காலம் மிகவும் முக்கியமானது. இஸ்லாமிய விடுமுறை அறிவிக்கப்படுவதற்கு இத்தடை விதிக்கப்பட்டது. பொதுவாக இஸ்லாமிய விடுமுறையின் போது பலரும் துபாய்க்குச் செல்வது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

சில தினங்களுக்கு முன், வளைகுடா அரபு நாடுகளில் இருந்து சௌதி அரேபியாவுக்குச் செய்யப்படும் ஏற்றுமதிகள் இஸ்ரேலுடன் தொடர்புடையதாக இருந்தால், அதற்கு வழங்கப்படும் சில சலுகைகள் வழங்கப்படாது எனக் கூறியது சௌதி.

இஸ்ரேல் உடன் தன் உறவுமுறையை சீராக்கிக் கொண்டிருக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு இது அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

**பொருளாதார போட்டி**

இரு நாடுகளும் தங்கள் பொருளாதாரத்தை ஹைட்ரோ கார்பன் ஏற்றுமதியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதில் முனைப்பாக இருக்கிறார்கள்.

சௌதி அரேபியாவோ மிக அதிரடியான பொருளாதாரக் கொள்கைகளை கடைபிடித்து வருகிறது. அவர்கள் சுற்றுலா, நிதி சேவைகள், தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளில் போட்டி போடுகிறார்கள்.

“சௌதி அரேபியா அப்பிராந்தியத்தில் விழித்துக் கொள்ளத் தொடங்கி இருக்கிறது. அது ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு ஏதோ ஒரு வகையில் கவலையளிப்பதாகவே இருக்கும்” என்கிறார் லண்டனின் சதல் ஹவுஸில் அசோசியேட் /பெல்லோவாக இருக்கும் நீல் க்வில்லியம்.

“அடுத்த 15 - 20 ஆண்டு காலத்தில், சௌதி அரேபியா ஒரு வலுவான பொருளாதாரமாக உருவெடுத்தால், அது ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொருளாதார மாதிரிக்கு ஆபத்தாகலாம்” என்கிறார் நீல்.

சௌதி அரேபியாவும், ஐக்கிய அரபு எமிரேட்ஸும் ஒபெக் கூட்டமைப்பின் புதிய ஒப்பந்தத்துக்கு சம்மதிப்பார்களா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இந்த சிறு கருத்து வேறுபாடுகள், இரு நாட்டின் நீண்ட கால உறவுமுறையில் பெரிய விரிசல்களை ஏற்படுத்தாது என்கிறார் அரசவைக்கு நெருக்கமான சௌதி பகுப்பாய்வாளர் அலி ஷிஹாபி.

“கடந்த காலங்களில் இதை விட பெரிய கருத்து வேறுபாடுகளை இரு நாடுகளும் எதிர்கொண்டுள்ளன” என்கிறார் ஷிஹாபி.

“எல்லா உறவுமுறைகளும் சில மேடு பள்ளங்களைச் சந்திக்கும், இதில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளும் அடக்கம். ஆனால், இந்த இரு நாடுகளுக்கு இடையிலான அடிப்படை உறவுமுறை என்பது மிகவும் வலுவானது. எனவே இந்த உறவுமுறையில் நீண்ட காலத்துக்கு ஒரு பெரிய விரிசல் ஏற்படுவது சாத்தியமல்ல” என்கிறார் அவர். ■



# புலமைச் சிகரம் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ..........................................................................

ii) .......................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ................................ (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது. (2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  .................................. (2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : .......................................................................... (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ...............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**


**16)** | 7 | 8 |
| --- | --- |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..................................................................


**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..................................................................

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ............ ii) 18, 15, 12, .............., ............

**21)** 3, 9, 14, 6, 10, 12, — பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

..................................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.................................................................. (30 புள்ளிகள்)

ஈழநாடு



# பஸில் பதவியேற்ற நாளில் தயாசிறியின் கோட்டையில் கவிழ்ந்தது 'தாமரை மொட்டு'

## ஆட்சிப்பீடம் ஏறியது சுதந்திர கட்சி

கொழும்பு, ஜூலை 10

பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் முன்மொழியப்பட்ட தவிசாளர் தோற்கடிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

மேற்படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளருக்கு 16 வாக்குகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு 20 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் 18 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 11 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் 7 பேரும், ஜே.வி.பியின் சார்பில் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் அரசியல் கோட்டையாகும். அந்தத் தொகுதியிலேயே அவரின் வாக்கு வங்கி தங்கியுள்ளது. சபையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அவரின் சகாக்களாவர்.

'மொட்டு' கட்சியிலுள்ளவர்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் சகாக்களாவர்.

தயாசிறி ஜயசேகரவை 'மொட்டு' கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இந்நிலையில், அவரின் கோட்டையில் 'மொட்டு' கட்சி மண்கவ்வியமை அரசியல் பின்னடையாகவே பார்க்கப்படுகின்றது. அதுவும் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வந்த நாளில் இவ்வாறு இடம்பெற்றுள்ளமை 'மொட்டு' கட்சி ஆதரவாளர்களை சினம்கொள்ள வைத்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

(இ)





# கதிர்காமம் ஆடிவேல் திருவிழா ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 10

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா இன்று 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இன்று முதலாவது பெரஹரா மூலம் வீதி உலா நடைபெறும் என கதிர்காமம் கோயிலின் பஸ்நாயக்க நிலமே டிஷன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இறுதி நாள் பெரஹரா எதிர்வரும் 23ஆம் திகதி இரவு வீதி உலா வரவுள்ளது எனவும், பெரஹராவின் சம்பிரதாய சடங்குகள் அனைத்தும் முறையாக நடைபெறும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை உற்சவம் மக்கள் பங்களிப்பின்றி நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பெரஹராவில் யானைகள், நாட்டியங்கள் உள்ளிட்ட கலாசார அம்சங்கள் அனைத்தும் இடம்பெறும் எனவும், அவை சுகாதார நெறிமுறைகளுக்கு அமைய நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி நீர் வெட்டுடன் உற்சவம் பூர்த்தியடையும் எனவும் கதிர்காமம் கோயிலின் பஸ்நாயக்க நிலமே டிஷன் குணசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஆசிரியருக்குக் கொரோனா தொற்று கற்பித்தல் நடவடிக்கை இடைநிறுத்தம்

நாவலப்பிட்டி, ஜூலை 10

நாவலப்பிட்டி வெஸ்ட் ஹேல் தேசிய பாடசாலையின் மத்திய நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த கற்பித்தல் நடவடிக்கை நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

'ஒன்லைன்' ஊடாக கற்றல் வாய்ப்புகளை இழந்த மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்படி பாடசாலையின் மத்திய நிலையத்தில் 5, 11 மற்றும் 13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் இடம்பெற்று வந்தன.

இதில் தரம் 11 இல் கற்பித்தலை மேற்கொண்ட ஆசிரியர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் நேற்று முதல் கற்பித்தல் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (இ)

# வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய மேலும் 47 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஜூலை 10

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய மேலும் 47 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நேற்றுமுன்தினம் 1,270 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனச் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் 1,223 பேர் புத்தாண்டுக் கொத்தணியில் பதிவானதுடன், 47 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத் தப்பட்டவர்களாவர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 69 ஆயிரத்து 946 ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம் கொரோனாத் தொற்றிலிருந்து இதுவரை 2 இலட்சத்து 39 ஆயிரத்து 584 பேர் குணமடைந்துள்ளனர். 27 ஆயிரத்து 11 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

# பூஸா சிறைச்சாலையில் 522 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 10

காலி, பூஸா உயர்பாதுகாப்பு சிறைச்சாலையிலுள்ள மேலும் 21 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தென் மாகாண பொதுசுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 30 சிறைக் கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 21 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த சிறைச்சாலையில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 522 ஆக உயர்வடைந்துள்ளது எனவும் பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)



# கொரோனா சட்டத்தை மீறிய மேலும் 266 பேர் சிக்கினார்கள்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

"நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 266 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்."

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

இதுவரை தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 48 ஆயிரத்து 808 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# ஒரு கிராமம் முற்றாக முடக்கம் நான்கு பிரதேசங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 10

கொரோனாத் தொற்றுப் பரவலால் களுத்துறை மாவட்டத்தில் ஒரு கிராமம் நேற்று அதிகாலை 6 மணி முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அகலவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ககுலந்தல தெற்கு கிராம சேவகர் பிரிவின் பிம்புருவத்த பகுதியே தனிமைப் படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித் துள்ளார்.

இதேவேளை, இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இதன்படி கேகாலை மாவட்டத்தில் மாவனல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிங்குல்ஓய, மாவட்ட ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தலைமன்னார் மேற்கு, தலைமன்னார் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# உணவுப்பற்றாக்குறை பாதிப்பு; 40 வீதத்தால் மேலும் அதிகரிப்பு!

## உலக உணவு திட்டம் அறிக்கை

WFP World Food Programme wfp.org

- 4.1 கோடி மக்கள் பஞ்ச அபாயத்தில்
- 33.9 வீதத்தால் உணவின் விலை உயர்வு

ஜெனிவா, ஜூலை 10

மோதல்கள், காலநிலை மாற்றம், கொரோனா தொற்று காரணமாக 27 கோடி பேர் உலகம் முழுவதும் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், உணவுப் பொருட்களின் விலையும் 33.9 வீதம் உயர்வடைந்துள்ளது என்று ஐ.நா. உலக உணவு திட்டம் தெரிவித்துள்ளது.

சமீபத்தைய உணவு விலை உயர்வு, மோதல்கள், காலநிலை மாற்றம் மற்றும் தொற்றுநோய் அழுத்தங்கள் அதிகரித்தமையால் உணவு பாதுகாப்பின்மை இந்த ஆண்டு 40 சதவீதம் உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. உலக உணவுத் திட்டம் வெளியிட்ட அறிக்கையில்,

“மக்களுக்கு இடையேயான மோதல், காலநிலை மாற்றம் மற்றும் கொரோனா தொற்று காரணமாக உணவுப் பற்றாக்குறையால் 27 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச அளவிலான வர்த்தக சந்தைகளில், உணவு விலைகள் ஜூன் மாதத்தில் ஆண்டுக்கு 33.9 சதவீதம் உயர்ந்துள்ளது. லெபனான் நாட்டில் கோதுமை மாவின் விலை 219 மடங்கும், சிரியாவில் சமையல் எண்ணெயின் விலை 440 மடங்கும் உயர்ந்துள்ளன.

43 நாடுகளில் சுமார் 4.1 கோடி மக்கள் பஞ்சத்தின் அபாயத்தில் உள்ளனர். நான்கு நாடுகளில் கிட்டத்தட்ட 6 இலட்சம் பேர் ஏற்கனவே பஞ்சம் போன்ற நிலைமைகளை அனுபவித்து வருகின்றனர். இந்த ஆண்டு எதியோப்பியா, மடகாஸ்கர், தெற்கு சூடான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளிலும், நைஜீரியா மற்றும் பர்கினா பாசோவிலும் பஞ்சம் போன்ற நிலைமைகள் உள்ளன, இதில் 5 இலட்சத்து 84 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்”, என்றுள்ளது. (ஐ)



# பங்களாதேஷ் ஆலையில் தீ: 52 பேர் மரணம்; 50 பேர் காயம்!

டாக்கா, ஜூலை 10

பங்களாதேஷில் ஒரு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 52 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 பேர் காயமடைந்தனர். அத்துடன் மேலும் சிலர் தொழிற்சாலைக்குள் சிக்கியிருக்கலாம் என அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

தலைநகர் டாக்காவிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நாராயங்கஞ்சில் நேற்று முன்தினம் இரவு பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலையின் பல மாடி கட்டடத்தின் தரை தளத்தில் தீவிபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

சம்பவ இடத்தில் 45 பேர் இறந்தனர். 7 பேர் காயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந் தனர். எத்தனை பேர் கட்டடத் தில் சிக்கியுள்ளனர் என தெரியவில்லை. நாங்கள் விசாரித்து வருகிறோம் என நாராயங்கஞ்ச் மாவட்ட நிர்வாகி முஸ்டைன் பில்லா தெரிவித்துள்ளார்.

தீ வேகமாகப் பரவியதை அடுத்து உயிர் தப்புவதற்காக கட்டடத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடியில் இருந்து குதித்தவர்களே காயமடைந்தனர் என்று தீயணைப்பு துறை அதிகாரி ஷா ஆலம் கூறினார். (ஐ)

# பிரிட்டனில் தொற்றாளர் ஐம்பது இலட்சம் கடந்தது

லண்டன், ஜூலை 10

பிரிட்டனில் நேற்று 32 ஆயி ரத்து 552 புதிய தொற்று நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டனர். இதனால், அந்த நாட்டில் பதிவான மொத்த தொற்று நோயாளர் தொகை 50 இலட்சத்தைக் கடந்தது.

நேற்றுமுன்தினம் வரையான தரவுகளின் பிரகாரம் பிரிட்டனில் மொத்தம் 50 இலட்சத்து 22 ஆயிரத்து 893 ஆக தொற்று நோயாளர்கள் உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்பட்டனர்.

அத்துடன், நேற்று மேலும் 35 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில் நாட்டில் கொரோனாவால் பலியானோர் தொகை ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 336 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, பிரிட்டனில் இதுவரை 4 கோடியே 56 இலட்சத்துக்கும் அதிகமானோர் தடுப்பசி பெற்றுள்ளனர். 3 கோடியே 41 இலட்சம் பேர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பாப்பரசருக்கு காய்ச்சல் பாதிப்பு

ரோம், ஜூலை 10

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட போதும், அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் உள்ளது என்று வத்திக்கான் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸூக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை குடலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அதில் அவருக்கு தொற்று எதுவும் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்றைய தினம் அவருக்கு காய்ச்சல் குறைந்ததுடன், உடல்நிலையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவர் உணவு அருந்த ஆரம்பித்து விட்டார். இன்னும் சில நாட்கள் அவர் மருத்துவமனையிலேயே ஓய்வு எடுப்பார் என்றும் செய்தி தொடர்பாளர் மேலும் கூறினார். (ஐ)

# சுவீடனில் விமானம் விபத்து; விமானியுடன் 9 பேர் மரணம்!

ஸ்ரோஹோம், ஜூலை 10

சுவீடனில் சிறிய ரக விமா னம் ஒன்று நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த 9 பேரும் உயிரிழந்தனர்.

விபத்தில் பலியானவர் களில் விமானியை தவிர, ஏனைய 8 பேரும் விமான சாகச நிகழ்ச்சிகளில் ஈடுபடும் வீரர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.



ஒரேப்ரோ நகரில் உள்நாட்டு நேரப்படி இரவு 7.20 மணியளவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து ஒரேப்ரோ நகரில் உள்ள விமான நிலைய வளாகத்துக்குள்ளேயே விழுந்து நொருங்கி தீப்பற்றி எரிந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# ஆப்கான் படையினர் தலிபான்களிடம் சரண்!



காபூல், ஜூலை 10

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கை ஓங்கி வரும் நிலையில் பெருமளவிலான இராணுவத்தினர் தலிபான்களிடம் சரணடைந்து வருகின்றனர் என்று அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க, நேட்டோ படைகள் அந்த நாட்டை விட்டு வெளியேறிவருகின்றன. எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு முன்னதாக அமெரிக்காவின் சகல படையினரும் அங்கிருந்து வெளியேறி விடுவர்.

இந்த நிலையில் தலிபான்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர். 400 மாவட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி தலிபான்கள் வசம் சென்று விட்டது. இந்த நிலையில் தலிபான்களுக்கு அஞ்சி ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு ஆயிரம் படையினர் தமது நாட்டுக்குள் அடைக்கலம் புகுந்தனர் என்று தஜிகிஸ்தான் படைகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் படையினர் தலிபான்களிடம் சரணடையும் படங்கள், காணொலிகள் என்பவை வெளியாகின. எனினும், எத்தனை பேர் இவ்வாறு சரணடைந்தனர் என்ற விவரம் வெளியிடப்படவில்லை. (ஐ)

# கேரளாவில் பெண்ணுக்கு ஸிகா வைரஸ் தொற்று!

திருவனந்தபுரம், ஜூலை 10

இந்தியாவின் கேரள மாநிலத்தில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் கர்ப்பவதி பெண் ஒருவர் ஸிகா வைரஸ் (Zika virus) தொற்றுக்கு உள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

கேரளாவில் ஸிகா வைரஸ் தொற்று அறிகுறிகள் தென்பட்ட 13 பேரின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு புனேயில் உள்ள தேசிய கிருமியியல் ஆய்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவர்களில் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த 24 வயதான கர்ப்பவதிக்கு ஸிகா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணின் உடல்நிலை தற்போது சீராக உள்ளதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

ஏடிஸ் வகை நுளம்புகள் கடிப்பதால் ஸிகா வைரஸ் பரவுகிறது. காய்ச்சல், தோலில் சொறி, மூட்டு வலி, தலைவலி உள்ளிட்டவை ஸிகா வைரஸ் பாதிப்பின் அறிகுறிகளாகும். 1947-ஆம் ஆண்டு உகாண்டா காடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஸிகா வைர ஸூக்கு இதுவரை தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# விம்பிள்டன் ரென்னிஸ் இறுதி: ஆஷ்லே - பிலிஸ்கோவா மோதல்!

லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் ரென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டத்திற்கு அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி, செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்ஸ்லம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான அரையிறுதி போட்டிகளில் ஒன்றில்,உலகின் முதல்நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி, 28ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனியின் கெர்பர் மோதிரார்.

முதல் செற்றை 6-3 என இலகுவாக வென்றார் ஆஷ்லே. ஆனால், இரண்டாவது செற் ரை பிறேக்கர் வரை சென்றது. எனினும் இறுதியில் 7 - 6 என்ற கணக்கில் அதையும் வென்றார். ஒரு மணி நேரம், 26 நிமிடம் நீடித்த போட்டியில் வெற்றி பெற்ற ஆஷ்லே பார்டி முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.



மற்றோர் அரையிறுதி ஆட்டத்தில் பெலாரஸின் சபலென்காவை எதிர்த்து செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா மோதினார்.

முதல் செற்றை 7 -5 என்ற செற் கணக்கில் சபலென்கா வெற்றி பெற்றார். ஆனால், இரண்டாவது சுற்றில் பிலிஸ்கோவா 6 - 4 என்ற செற் கணக்கில் வென்றார். மூன்றாவது செற்றையும் 6 - 4 என்ற கணக்கில் அவரே வென்றார்.

இன்று நடக்கும் இறுதியாட்டத்தில் ஆஷ்லே பார்டி, பிலிஸ்கோவா ஆகியோர் மோதுவர். (ஐ)



# சென்னை அணிக்காக டோனி விளையாடுவார்!

சென்னை, ஜூலை 10

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக இன்னமும் ஒன்று அல்லது இரு ஆண்டுகள் டோனி விளையாடுவார் என்று அந்த அணியின் பிரதம நிறைவேற்று அதிகாரி காசி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு 2008ஆம் ஆண்டு முதல் தலைவராக டோனி இருந்து வருகின்றார். ஐ.பி.எல். கிண்ணத்தை மூன்று முறை வென்றுள்ளார்.

சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற அவர் கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் துடுப்பாட்டத்தில் தடுமாறி வருகின்றார். இந்த நிலையில் இந்த ஆண்டுடன் அவர் ஓய்வு பெறுவார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையியே காசி விஸ்வநாதன் டோனி ஒன்று அல்லது இரு ஆண்டுகள் விளையாடுவார் என்று தெரிவித்துள்ளார்.

இதனால், அடுத்த ஆண்டு நடக்கும் பெரும் ஏலத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் டோனியை தக்கவைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிகிறது. (ஐ)

# ஒலிம்பிக் போட்டிகளை காணை பார்வையாளர்களுக்கு தடை!

ரோக்கியோ, ஜூலை 10

ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசியல் அழுத்தம் மற்றும் அதிகரித்து வரும் கோவிட்-19 தொற்றுகள் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகா, வியாழக்கிழமை தலைநகருக்கு நான்காவது அவசரகால நிலையை அறிவித்த பின்னர் எடுக்கப்பட்ட இந்த முடிவு, ரோக்கியோ ஒலிம்பிக்கை பார்வையிடுவதற்கான ரசிகர்களின் இறுதி நம்பிக்கையை இல்லாது செய்தது.

ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இந்த நிலையில் அண்மையில் நடந்த ஆய்வில், 35 வீதமானோர் போட்டிகள் பார்வையாளர்கள் இல்லாது நடைபெற வேண்டும் என்றனர்.

26வீதமானோர் பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்றும், 34 சதவீதம் பேர் விளையாட்டுகள் இரத்து செய்யப்பட வேண்டும் அல்லது ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று விரும்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

TOKYO 2020

# அனுபவமற்ற இங்கிலாந்திடம் பாகிஸ்தான் அணி படுதோல்வி!

கார்டிப், ஜூலை 10

பென் ஸ்ரோக்ஸ் தலைமையிலான அனுபவமற்ற 5 புதுமுக வீரர்கள் கொண்ட இங்கிலாந்து அணியிடம் 9 விக்கெட்களால் தோல்வியடைந்தது பாகிஸ்தான் அணி.

இங்கிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி தற்போது ஒருநாள் தொடரில் பங்கேற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி வியாழன் இரவு கார்டிப்பில் நடந்தது.

இங்கிலாந்து அணியினர் இலங்கைக்கு எதிரான போட்டியின்போது தொற்றுக்கு இலக்கானமையால் பென்ஸ்ரோக்ஸ் தலைமையில் 5 புதுமுகங்கள் - 5இற்கும் குறைவான ஒருநாள் போட்டி அனுபவத்தை கொண்ட 4 வீரர்கள் என அனுபவமற்ற இங்கிலாந்து அணி களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது.



சகீப் மஹ்மூத் அபாரமான பந்துவீச்சால் பாகிஸ்தான் அணி 35.2 ஓவர்களில் 141 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பாகிஸ்தான் அணி சார்பில் பஹார் ஷமான் 47, சகீப் கான் 30, சொஹைப் மசூத் 19 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் சகீப் மஹ்மூத் 4 விக்கெட்களையும், ஓவர்ரோன், மட் பர்கின்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி. 21.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

டேவிட் மலன் 68 ஓட்டங்களையும், ஷாக் கிராவ்லி 58 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

போட்டி நாயகனாக சகீப் மஹ்மூத் தெரிவானார். 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 1- 0 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலை வகிக்கின்றது. (ஐ)

# இலங்கை அணியின் பயிற்றுநருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 10



இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் கிராண்ட் பிளவர் கோவிட்-19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின் பின்னர் இலங்கைக்கு திரும்பிய முன்னாள் சிம்பாப்வே வீரரான கிராண்ட் பிளவர், தொற்று உறுதிப்படுத்தப்பட்டவுடன் தனிமைப்படுத்தப்பட்டார்.

இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் ஒருநாள், இருபது - 20 தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் மூன்று நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணி தங்களது கட்டாய தனிமைப்படுத்தல் காலத்தை முடித்து கொழும்பில் தற்சமயம் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கை வீரர்களும் ஆதரவு ஊழியர்களும் இங்கிலாந்திருந்து நாட்டுக்கு வருகை தந்ததன் பின்னர் கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தனிமைப் படுததப்பட்டுள்ளனர்.

தற்சமயம் மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றி வரும் பிளவரின் கோவிட்-19 நேர்மறை அறிக்கை இலங்கை - இந்தியா தொடரில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

# அரசுக்கு எதிராக யாழில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"தற்போது நாட்டில் உள்ள அரசியல் நிலைமையானது மக்களுக்கு விரோதமான செயற்பாடாகவும் மக்களுக்கு எதிரான செயலாகவும் காணப்படுகின்றதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த நாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பிரதமராக, ஜனாதிபதியாக, அமைச்சர்களாகக் காணப்படுகின்றார்கள்.

தற்போது நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருள்கள் பொதுமக்கள் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு விலையேற்றம் காணப்படுகின்றது.

கொரோனா என்ற திரை மறைவில் நமது நாடு விற்கப்படுகின்றது. கடல், தரை என்பன மறைமுகமாக இந்த அரசால் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுகின்றது.

எனவே, பொதுமக்களோடு இணைந்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியானது அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கவுள்ளது. நாளை (இன்று) சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்களுடன் இணைந்து அரசுக்கு எதிராகப் போராடவுள்ளோம்" - என்றார். (இ-3)




# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு: கட்டுப்படுத்த இராணுவத்தினர் நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கனகராயன் ஆற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும், சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கனரக வாகனங்களை பயன்படுத்தி, தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனையடுத்து, மணல் அகழ்வு நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில், பிரதேச செயலாளர் மற்றும் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள இராணுவ உயர் அதிகாரி ஆகியோர் நேற்றுப் பிற்பகல் சென்று, நிலைமைகளை பார்வையிட்டதுடன், இராணுவ காவலரண்களை அமைத்து, மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இ)



# இளைஞர்கள் இருவர் நேற்று பரிதாப மரணம்

கொழும்பு, ஜூலை 10

நவகமுவ வேக்கவத்த பிரதேசத்தில் கற்குவாரியொன்றில் விழுந்து இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கல்வாரிக்கு வெடி வைத்து விட்டு ஓடும்போதே குறித்த இருவரும் காலிடறி கீழே விழுந்து உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் பகுதியில் இடியன் துப்பாக்கியுடன், ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மல்லாவி புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, குறித்த இடத்துக்குச் சென்ற விசேட அதிரடிப் படையினர் இடியன் துப்பாக்கியையும், சட்ட விரோதமாக இடியன் துப்பாக்கியை வைத்திருந்த நபரையும் கைதுசெய்து மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)



# சிறை பாதுகாவலர் ஹெரோயினுடன் கைது

கொழும்பு, ஜூலை 10

ஹெரோயின் போதைப் பொருளை தன்னகத்தே வைத்திருந்த சிறைச்சாலைப் பாதுகாவலர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

சந்தேகநபரிடம் இருந்து 96 ஹெரோயின் பைக்கற்றுக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

# சுற்றுலாத்துறை சார்ந்தவர்களுக்கு கொரோனா தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 10

சுற்றுலா வழிகாட்டிகள் உள்ளிட்ட சுற்றுலாத்துறையில் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டதின் முதலாவது கட்டம் தென் மாகாணத்தில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது எனச் சுற்றுலாத் துறை அமைச்சின் செயலாளர் ஸ்ரீபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அதற்கமைய, சுற்று லாத் துறையுடன் தொடர்புபட் டுள்ள 30 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (இ)



## தச்சன்தோப்பு சிந்தாமணி பிள்ளையார் ஆலயம்

## கூறுவிலை கோரல்

மேற்படி ஆலயத்தில் கீழ்வரும் திருத்த வேலைகள் செய்வதற்கான கூறுவிலைகள் அனுபவமுள்ள நிர்மாணிகளிடம் இருந்து ஆலய நிர்வாகத்தினரால் கோரப்படுகிறது.

1. **ஆலய கூரை திருத்தவேலை**
2. **ஆலயத்திற்கு வர்ணம் பூசுதல்**
3. **உள்வீதி நிலத்திற்கு கருங்கல் பதித்தல், முன்மண்டபத்துக்கு தெராசோ** (Terraso) **பதித்தல்**
4. **வெள்ளிரும்பு கைப்பிடி வேலி** (Hand Raul) **முன் மண்டபத்தை சுற்றி அமைத்தல்**

மேற்படி வேலைகளை ஆலய நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். இவ்விளம்பரம் பதிவிட்ட நாளிலிருந்து 10 நாள்களுக்குள் கூறுவிலைகள் ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கவேண்டும்.

தொடர்புகளுக்கு:
**சி.முருகேசு** (முகாமையாளர்) 077 612 8431
**ந.கணேசமூர்த்தி** (செயலாளர்) 077 786 2353

**ஆலய நிர்வாகம்**

## பகிரங்க காலக்கெடு அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிலத்தடி நீர் மாசடைதலை தடுத்தல் மற்றும் நிலத்தடி நீர் பற்றாக்குறையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையினை ஏற்படுத்தும் நோக்கில் எமது பிரதேசத்தில் வியாபார நோக்கங்களுக்காக நிலத்தடி நீரினை பயன்படுத்தி தொழில் முயற்சியில் ஈடுபடுவது சபையின் தீர்மானத்திற்கமைய முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, சபையின் அனுமதியில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கும் மேற்குறித்த தொழில் முயற்சி நிலையங்களினை எதிர்வரும் 14 நாட்களுக்குள் பூரணமாக மூடுமாறு நிறுவன உரிமையாளர்களுக்கு பகிரங்கமான காலக்கெடுவினை சேவையுணர்வுடன் அறியத் தருகின்றேன்.

தவறும் பட்சத்தில் 24.07.2021 ஆம் திகதிக்கு பின்னர் தங்களுக்கெதிராக சபையினால் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ்**
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்
2021.07.10

## நவாலி படுகொலை...

வழக்கமாக, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பிரதான அஞ்சலி நிகழ்வு இடம்பெறுவது வழமை. இதேபோன்று நவாலி ஸ்ரீகதிர்காமக் கந்தன் ஆலயத்திலும் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெறுவது வழக்கம். கொரோனா தொற்று அச்சம் - தனிமைப்படுத்தல் சட்டம் காரணமாக வழக்கமான நிகழ்வுகள் எவையும் இடம்பெறவில்லை.

எனினும், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை தூபியில் எம். கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, நேற்றைய தினம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய வளாகம் மற்றும் அதனை அண்டிய சூழலில் பொலிஸாரும், இராணுவத்தினரும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

முன்னேறி பாய்தல் இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்கள் நவாலி தேவாலயத்திலும் அதன் அயல் சூழலிலும் தஞ்சமடைந்திருந்த போது இலங்கை விமானப்படையின் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. இதில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என 147இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 520இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## 1,537 பேருக்கு...

483 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,451 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 41 ஆயிரத்து 35 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 14 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## ஒரு நாடு...

சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற எதிரணியின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எம்.பிக்கள் கலந்துக்கொண்டார்கள். யாழ். எம்.பி. விக்னேஸ்வரன், த.மு.கூ. எம்பிக்கள் வேலு குமார், உதய குமார் ஆகிய தமிழ் எம்.பிகளும் கலந்துக்கொண்டனர். இதன் போது உரையாற்றிய த.மு.கூ. தலைவர் மனோ எம்.பி மேலும் கூறியதாவது,

"தோட்ட தொழிலாளர்கள் வேதனம் இல்லாமல், துன்பத்தில் சிக்கி, நிர்க்கதி நிலையை நோக்கி தள்ளப்பட்டுள்ளனர். இரசாயன கப்பல் அழிவினால், மீனவர்கள் தொழில் இழந்து தவிக்கின்றனர். உரம் இல்லாமல், விவசாயிகள், விளைச்சல் இல்லாமல், வருமானம் இல்லாமல் துன்புறுகின்றனர்.

இதனாலேயே நாடு முழுக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. மக்கள் தங்கள் துன்பங்களை நாட்டுக்கு தெரிவிக்க வேறு வழி இல்லை. ஆனால், அரசாங்கம் பொலிஸை போட்டு, மக்களை கைது செய்கிறது. கொரோனாவை காட்டி, தனிமைப்படுத்துகிறது. அதேவேளை பஸில் ராஜபக்ஷ பலரை கூட்டி நிறுத்தி பதவி பிரமாணம் செய்கிறார். அவரை வாழ்த்தி அவரது கட்சி நபர்கள் கூடி நின்று பட்டாசு வெடிக்கிறார்கள். அவர்களை பொலிஸ் கண்டுக்கொள்வது இல்லை. இது என்ன நியாயம்?

இது சுதந்திர சதுக்கம். இங்கே இன்று சுதந்திரத்தை தேட வேண்டியுள்ளது. நீங்கள்தானே ஒரு நாடு ஒரு சட்டம் என்று சொன்னீர்கள். இன்று மக்களுக்கு ஒரு சட்டம். அரசனுக்கு இன்னொரு சட்டமா?

இலங்கை பொலிஸ் மீது எனக்கு அன்பு இருக்கிறது. ஆனால், அந்த பொலிஸ், அரசியல்வாதிகளின் பேச்சை கேட்டு ஆடக்கூடாது. சட்டம் உருவாக்குவது நாடாளுமன்றத்தில் ஆகும். நீங்கள் புது புது சட்டங்களை உருவாக்கி மக்களை அடிமைப்படுத்த முயல வேண்டாம். மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுங்கள். ஆர்ப்பாட்டங்கள் நின்று போகும். இன்று இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்று சேர்த்து, நாம் சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் என்ற இலங்கை நாட்டை உருவாக்குவோம்" என்றார்.

## ஆர்ப்பாட்டங்களை...

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் பாராளுமன்ற உறுப்பினராக - அமைச்சராகப் பதவியேற்றவுடன் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை எதிரணியினர் தீவிரப்படுத்தியுள்ளனர். குறிப்பிட்ட ஒரு சிலரைக்கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த ஆர்ப்பாட்டங்கள் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசைக் கவிழ்க்கவே முடியாது.

நாட்டு மக்கள் மனதில் 'தாமரை மொட்டு' சின்னமே இருக்கின்றது. இந்த 'மொட்டு'க்கு வாக்களித்துத்தான் நாட்டின் பலமிக்க ஜனாதிபதியையும், மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான அரசையும் மக்கள் தெரிவு செய்தார்கள்.

எதிரணியினரின் இந்த ஆர்ப்பாட்டங்கள், நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் வழங்கிய அமோக ஆணைக்குத் தூசு.

எனவே, பிரயோசனமற்ற இந்த ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டுவிட்டு நாட்டினதும் மக்களினதும் நலன் சார்ந்த அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிரணியினரிடம் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார். (இ)

## ஆர்ப்பாட்டங்கள்...

சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தொற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை நடத்த நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது. சுகாதார அதிகாரிகளாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதே ஒழிய பொலிஸாரினால் அல்ல.

கொரோனா பரவல் அச்சுறுத்தல் காரணத்தினால் தான், தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் பொலிஸார் தங்களின் கடமையையே மேற்கொண்டார்கள். எதிர்காலத்திலும் எவரேனும் போராட்டங்களை மேற்கொண்டால், பொலிஸார் அவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவார்கள்.

இதில் நாம் எப்போதும் சமரசங்களை செய்துக் கொள்ளப்போவதில்லை-என்றார்.

## அரசியல்...

பக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே இடம்பெற்றுள்ள சந்திப்பு மேலும் கவனம் பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் இரவு குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இராப்போசனத்துடன் நிகழ்ந்துள்ள இச்சந்திப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியாரும் கலந்து கொண்டிருந்தார்.

இச்சந்திப்பின் போது பல முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளதாக அறிய முடிகின்றது. (அ)

## சுதந்திர...

னெடுத்தன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான விக்னேஸ்வரன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பிக்கள் உட்பட எதிரணி எம்.பிக்கள் பங்கேற்றிருந்தனர். (அ)

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் கைதுசெய்யப்பட்டமை ஒரு கடத்தல்

## சபையில் சுட்டிக்காட்டினார் அனுரகுமார

கொழும்பு, ஜுலை 10

பத்தரமுல்லைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்த நடவடிக்கை ஒரு கடத்தல் சம்பவம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸநாயக்க.

இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக தமது கட்சி ஒரு அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்யும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட 33 பேரை தனிமைப்படுத்துமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை நீதிவான் நிராகரித்தார். அத்தகைய முடிவுக்கு மத்தியில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பலர் முல்லைத்தீவில் உள்ள ஒரு தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பப்பட்டனர். தொடர்புடைய அமைச்சர், பொலிஸ் மா அதிபர் அல்லது ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்றும் கேள்வி எழுப்பினார்.

இது அரசாங்கத்தின் அரசியல் சூனிய வேட்டை. முல்லைத்தீவுக்கு அனுப்பப்பட்டவர்கள் உடனடியாக மீள அழைக்கப்படவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பெண்கள் 13 பேர் உட்பட மேலும் 43 பேர் கொரோனாவால் மரணம்!

கொழும்பு, ஜுலை 10

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக மேலும் 43 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் (ஜுலை-08) இவ்வாறு 43 கோவிட்-19 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் 13 பேர் மற்றும் ஆண்கள் 30 பேர் என இவ்வாறு 43 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3434 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார பணிப்பாளரின் வேலையை பொலிஸார் கைகளில் எடுத்துள்ளனர்

## அதனால்தான் இந்த நிலைமை என்கிறார் சஜித்

கொழும்பு, ஜுலை 10

சுகாதார பணிப்பாளரினால் செயல்படுத்த வேண்டிய விடயங்களை பொலிஸார் கையில் எடுத்துள்ளதன் மூலம் நாட்டில் காட்டுச் சட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு வியாழக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட சிவில் செயற்பட்டார்கள் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தில் மார்ச் 25 ஆம் திகதி வர்த்தமானியில் கொரோனா சுகாதார விதிமுறைகளை அமுல்படுத்த பொருத்தமான அதிகாரியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு மட்டுமே இந்த சட்டத்தை செயற்படுத்த முடியும். அத்துடன் ஒக்ரோபர் மாதத்தில் பொது இடங்களில் நடந்து கொள்ளுதல் தொடர்பான ஒழுங்குவிதிகளில் மீற்றர் இடைவெளியும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளரே செயற்படுத்த வேண்டும்.

இந்நிலையில் வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தின் போது ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட நிலையில் அதில் ஈடுபட்டிருந்தவர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் நீதிமன்றத்தினால் அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் சுகாதார பரிசோதனைகள் எதனையும் மேற்கொள்ளாது அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சரத்துக்கள் அனைத்தையும் மீறியும் மற்றும் முன்வைக்கப்பட்டுள்ள சகல ஒழுங்குவிதிகளை மீறியும், தனிமைப்படுத்தல் தொடர்பான சட்டத்தின் சரத்துகளை மீறியும், ஒக்டோபர் 15 ஆம் திகதி மற்றும் மார்ச் மாதத்தில் முன்வைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை மீறியும் சுகாதார பணிப்பாளரினால் செயல்படுத்த வேண்டிய விடயங்களை பொலிஸார் கையில் எடுத்துள்ளனர்.

இந்நிலையில் பிணை வழங்கப்பட்டவர்களை அன்றிஜன் அல்லது பி.சி. ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தாது, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கு உள்ளான ஜோசப் ஸ்டாலின், பிக்குகள் மற்றும் பெண்களை எவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு அனுப்ப பொலிஸாருக்கு தீர்மானிக்க முடியும். பொலிஸார் அரசியலமைப்பையும், மனித உரிமைகளையும் மீறி நடந்துகொண்டுள்ளனர். அப்படியாயின் இந்த நாட்டில் காட்டுச் சட்டமே இருக்கின்றது.

இவர்களை தனிமைப்படுத்தலுக்கு அனுப்பும் போது நீதிமன்றத்திலோ, அதற்கு வெளியிலோ எந்தவொரு பொதுச் சுகாதார பரிசோதகரும் இருக்கவில்லை. அவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை எதுவும் நடத்தப்படவில்லை. அதற்கான அதிகாரிகள் யாரும் அந்த இடத்தில் இருக்கவில்லை. நீங்கள் கூறும் தனிமைப்படுத்தல் சட்டங்கள் அமைச்சு பதவியேற்பின் பின்னர் நடத்தப்படும் நிகழ்வுகள், கொண்டாட்டங்களுக்கு செல்லுபடியாகாதா? பதவியேற்பின் பின்னர் பணிகளை பொறுப்பேற்கும் போது தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறி செயற்பட முடியுமா?" எனக் கேள்வி எழுப்பினார்.

ஈழநாடு
Eelanadu

# அரசின் தலையசைப்புக்கேற்ப செயல்படுகின்றார் சபாநாயகர்

## சபையில் சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10

அரச தரப்பு பிரதம கொறடாவின் தலையசைப்புக் கேற்ப சபாநாயகர் செயற்படுகின்றார். அவரால் தலை யாட்டாமல் பதில் வழங்க முடியவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. சமிந்த விஜேசிறி குற்றஞ்சாட் டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது சமிந்த விஜேசிறி எம்.பியின் மேலதிக கேள்விக்கு சபாநாயகர் அனுமதி மறுத்தபோதே இவ்வாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

“சபாநாயகரே நாங்கள் ஒரு கேள்வியைக் கேட்டால் நீங்கள் உடனடியாக அரச தரப்பு பிரதம கொறடாவின் முகத்தைத்தான் பார்க்கின்றீர்கள். மேலும், கீழும் தலை யசைத்தால் எமக்கு அனுமதி வழங்குகின்றீர்கள். பக்க வாட்டில் தலையசைத்ததால் அனுமதி மறுக்கின்றீர்கள். அரச தரப்பு பிரதம கொறடாவின் தலையசைப்புக்கு ஏற்றவாறே நீங்கள் செயற்படுகின்றீர்கள். நீங்கள் உங்கள் மனச்சாட்சிப்படி நடக்கவில்லை” என்று மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூறினார்.

இதன்போது எழுந்த அரச தரப்பு பிரதம கொறடா வான அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ,

“நான் ஒருபோதுமே சபாநாயகருக்கு தலையசைத்தது கிடையாது. சபாநாயகராக கரு ஜயசூரிய இருந்தபோது தான் அவ்வாறான நிலைமை இருந்தது. அவர்தான் மிகவும் பக்கச்சார்பாக செயல்பட்டார். இப்போது அப்படியல்ல.

சபாநாயகர் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் செயற்படுகின்றார். சபாநாயகர் எதிர்க்கட்சியினருக்கு அதிக நேரம் கொடுப்பதால்தான் இவர்கள் சபாநாய கரைத் தூற்றுகின்றனர்” - என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த சமிந்த விஜேசிறி எம். பி., ”நாம் உங்களிடம் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் சபாநாயகர் என்ற முறையில் தலையசைப்புக்குத் தலை குனியாது தலை நிமிர்ந்து பதில் வழங்க வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றோம்” - என்றார்.

இது தொடர்பில் சபாநாயகர் பதில் ஏதும் கூறாது சிரித்தவாறு கேட்டுக்கொண்டிருந்தார். (இ)

# உயர்கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசிகள்

## அரசு முடிவு என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் இருந்து உயர்கல்விக்காக வெளிநாடு களுக்குச் செல்லும் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி களை ஏற்ற அரசு முடிவு செய்துள்ளது என்று இராணு வத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல எதிர் பார்க்கின்ற 1,130 மாணவர்கள் பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள தமது பெயர்களைப் பதிவு செய்துள்ள னர் என்றும் அவர் கூறினார்.

இதன்படி, உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல் லும் மாணவர்களுக்காக பிரத்தியேகமாக ஜூலை 2 ஆம் திகதி தடுப்பூசியைச் செலுத்தும் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயர்கல்விக்காக தமது நாடுகளுக்கு வருவதற்கு முன் னர் தடுப்பூசி கோரும் நாடுகளுக்குச் செல்லும் மாணவர் களுக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

அதேநேரம் பைசர் தடுப்பூசி தேவைப்படும் நாடுகளுக் குச் செல்லும் மாணவர்களுக்கு தற்போது பைசர் தடுப் பூசி செலுத்தப்படுகின்றது. (இ)

# ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளை சகல மக்களும் நிராகரிக்க வேண்டும்

## ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தல்




யாழ்ப்பாணம், ஜூலை 10

”ராஜபக்ஷக்கள், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இவர்களை அனைத்து மக்களும் நிராகரிக்க வேண்டும்.”

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராம லிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”தற்போதைய ராஜபக்ஷக்களுடைய அரசின் மக்கள் மீதான அடக்குமுறைகள் துரிதமடைந்து கொண்டிருக் கின்றன. இதற்கான எடுத்துக்காட்டாக பாராளுமன்ற முன்றலில் இடம்பெற்ற ஆர்பாட்டத்தின்போது தொழிற் சங்கத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கைதுசெய்யப் பட்டமையைக் குறிப்பிடலாம்.

இலவசக் கல்விக்குச் சாவுமணி அடிக்கும் கொத்தலா வல சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான முஸ்தீபுகளும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மூன்றிலி ரண்டு பெரும்பான்மை உள்ளதால் ராஜபக்ஷக்களின் அரசானது எதேச்சதிகாரமாகச் செயற்பட்டுக்கொண் டிருக்கின்றது.

கொரொனாவையும், தனிமைபடுத்தல் சட்டத்தை யும் பிரயோகித்து மக்கள் நலன் சார்ந்த போராட் டங்களையும் அடக்கு முறைகளையும், மக்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதையும் இந்த அரசு இலகுவாக மேற்கொண்டு வருகின்றது.

தேர்தலின்போது மக் களுக்கு வழங்கிய வாக்கு றுதிகளில் எந்தவொரு வாக்குறுதியையும் இந்த அரசு இதுவரையில் நிறைவேற்றவில்லை.

நாட்டின் பொருளா தாரமானது மிகுந்த சீரழி வின்பால், இட்டுச்செல் லப் பட்டிருப்பதொடு, மக்களின் அன்றாடச் ஜீவனோபாயமும் மிகவும் பரிதாபமாக முடக்கப் பட்டுள்ளது. அத்தியாவ சிய உணவுப்பொருட் களின் விலைகள் ஈவிரக்க மின்றி அதிகரிக்கப்படு கின்றன. எண்ணெய் விலை யும் அதிகரிக்கப்பட்டுள் ளது.

உரம் இலவசமாக வழங்குவோம் எனக் கூறி இந்நாட்டு விவசாயிகளின் அதிகளவு வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத்த இந்த அரசு, அவ்வாக் குறுதிகளையும் நிறைவேற்ற வில்லை. அதனால், இன்று நாட்டு மக்கள் ஏதாவது ஒரு உரத்தைத் தா என அரசாங்கத்திடம் கேட் டுப் போராடிக் கொண்டி ருக்கின்றார்கள். ஆனால், அதற்கும் செவிமடுக்காத அரசு அவர்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்விட்டுள்ளது.

எங்கேயோ சென் றுக்கொண்டிருந்த கப் பலை இரண்டு நாடுகள் தமது துறைமுகத்துக்கு வரவேண் டாம் என்று அனுமதி மறுத்த போதிலும்கூட, அந்தக் கப்பலை எமது நாட்டுக்கு வரவழைத்து எமது கடல் வளம், சமுத்திர வளம் ஆகியவற்றை நாசப்படுத்திய இந்த அரசு மீன்வர்களின் வாழ்வாதாரத்துக்குச் சாவு மணி அடித்து சாதனை படைத்துள்ளது.

இந்நாட்டின் கடல்வளத்தைச் சற்றேனும் கருத்தில் எடுக் காமல் ‘டொலர்’ ஒன்றுக்காவே அரசு இவ்வாறான நாச கார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது” - என்றார். (இ - 03)

# மரண அறிவித்தல்

மலர்வு 17 - 07 - 1940



உதிர்வு 06 - 07 - 2021

## செல்லத்துரை செல்வரட்ணம்

புலோலி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு, முள்ளியவளை மாமூலை, பிரித்தானியா Amersham ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வரட்ணம் கடந்த (06.07.2021) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை – இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (சுப்பிரமணியம்– Cycle Repairing Shop) – தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதி (மாமூலை) யின் அன்புக் கணவரும், செல்வரதன் (அலக்ஸ்– பிரான்ஸ்), காணாமல்போன பத்மலதன் (வவா), காலஞ்சென்ற சுதர்சன் (சுதன்), காலஞ்சென்ற சுகிர்தன்(மதன், திவாகர்) மற்றும் சுதர்சனா (கல்பனா– பிரித்தானியா), மாவீரர் சுதர்மினா (சுதனா, சுதா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற துரைவீரசிங்கம் மற்றும் பூபதி (வவுனியா), இராசகுலதேவி (வவுனியா), செல்வராணி – இராதாகிருஷ்ணன்(கொழும்பு), செல்வராசா– செல்வராணி (மன்னார்), சிவராணி– பெரியதம்பி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோதீஸ்வரி செல்வரதன் (பிரான்ஸ்), ஜனனி (அவுஸ்திரேலியா), கலாமோகன் (அப்பாச்சி– பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,நிந்துசா(பிரான்ஸ்), சுதர்ணா (பிரான்ஸ்), ஜெனுசா (பிரான்ஸ்), லிபிசன் (Libi- அவுஸ்திரேலியா), டிலான் (அவுஸ்திரேலியா), கோபிசா (பிரித்தானியா), சரண்(பிரித்தானியா), சேரன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Monday, 12 Jul 2021 3:00 PM - 6:00 PM, Wednesday, 14 Jul 2021 3:00 PM - 6:00 PM, Friday, 16 Jul 2021 3:00 PM - 6:00 PM
Angel Funeral Directors 267 Allenby Rd, Southall UB1 2HB, United Kingdom

*கிரியை :*
Sunday, 18 Jul 2021 12:45 PM - 2:45 PM
Divinity Funeral Care 209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom

*தகனம் :*
Sunday, 18 Jul 2021 4:00 PM
Hendon crematorium Holders Hill Rd, London NW7 1ND, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். COVID-19 மருத்துவ எச்சரிக்கைகள் காரணமாக உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் இறுதி வணக்க மரியாதை நிகழ்வில் இன்றைய காலச்சூழலுக்கு அமைய முகக்கவசங்கள் மற்றும் சமூக இடைவெளி போன்றனவற்றைப் பேணுமாறு மிக வும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**கலாமோகன் - மருமகன்**
Mobile : +447506037499

தகவல்
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-பண்டிதர் திருநாவுக்கரசு




7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- காதல் கொண்டேன்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்ரியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு